# நூனின் குமாரனாகிய
# யோசுவா



திருமறை அறிஞர்
பாஸ்டர் A. கிறிஸ்டோபர்

# நூனின் குமாரனாகிய யோஷுவா

ஆசிரியர்

திருமறை அறிஞர்

REV. Dr. A.கிறிஸ்டோபர் M.A., D.D.,

விண்ணக அப்பம்

4/2, நேருவீதி, சூரம்பட்டி, ஈரோடு - 9.



FIRST EDITION - FEB - 1998

TOTAL COPIES - 2000

COPY RIGHT - TO WINNAGA APPAM

PRICE - Rs. 40.00 (IN INDIA)

BOOK NUMBER - T 31

FOR DETAILS CONTACT

**WINNAGA APPAM**

No.4/2, Nehru Street, Surampatti,
Erode - 638 009. S. India.
Phone : (0424) 2277286

# அணிந்துரை

திருமறை பெரியார்
யோபு ஞானப்பிரகாசம்
தலைமைப் போதகர்ஸ்தாபகர்
இந்தியன் பெந்தெகொஸ்தே அஸம்பிளீஸ்
கோவை – 18, தென் இந்தியா.

எங்கள் உடன் ஊழியரும் ஈரோடு மாவட்ட சபைகளின் மத்திய போதகருமாகிய திருமறை அறிஞர் பாஸ்டர் அ. கிறிஸ்டோபர் அவர்களுக்காய் கர்த்தரைத் துதிக்கிறேன்.

இவர் மிகச் சிறந்த போதகரும் வேதாகம விரிவுரையாளரும் ஆவார். எங்கள் ஸ்தாபனத்தின், இந்தியா பெந்தெகொஸ்தே நற்செய்தி மாத இதழின் இணை ஆசியராய் இருந்து திறம்பட செயல் பட்டு வருகிறார்.

இவரது இலக்கிய சேவையை பாராட்டி நிறுவனம் 97–ஆம் ஆண்டு இவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்து கௌரவப்படுத்தியதைக் குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

பல்வேறு வேதாகம புருஷர்களைக் குறித்தும், பல ஆகமங்களை விளக்கியும் இவர் எழுதின பல புத்தகங்கள் ஆழமான சத்தியங்கள் அடங்கியவனவாகவும், புதிய வெளிப்படுத்தல் நிறைந்தவையாகவும் இருந்தபடியால் கிறிஸ்தவ வாசகர் உலகத்தில் மாபெரும் வரவேற்பை பெற்றன.

இப்பொழுதும் நூனின் குமாரனுகிய யோசுவா என்ற தலைப்பில், யோசுவாவைக் குறித்தும், யோசுவாவின் ஆகமத்தைக் குறித்தும் இறையியல், மற்றும் வாழ்வியல் நோக்கில் எழுதியிருக்கிற இந்த நூல் இவரின் மிகச் சிறந்த படைப்பாகும்.

ஆவிக்குரிய கிறிஸ்தவன் பரம கானனை சுதந்தரித்துக் கொள்ளத் தேவையான அம்சங்களை தெளிவாகவும், சரியாகவும் இந்நூலில் அவர் வடித்துள்ளார்.

இதை வாசிக்கிறவர்கள் தங்கள் வாழ்க்கையில் சந்திக்கிற எரிகோக்களை தகர்த்து, ஆயிக்களை அழித்து பரம ஈவுகளை சுதந்தரித்துக் கொள்வார்கள் என்பது திண்ணம்.

இவரின் இலக்கியப் பணிகளை கர்த்தர் ஆசீர்வதித்து இன்னும் பல நூல்களை வெளியிட அருளையும், பொருளையும், தந்தருள்வாராக என்று வாழ்த்துகிறேன்.



# என்னுரை

என் இனிய வாசகர்களுக்கு இரட்சகரின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

வேதாகமத்தில் மிகக் குறுகிய கால சம்பவத்தை மிகத் தெளிவாக விவரிக்கின்ற மிகச் சிறந்த ஒரே புத்தகம் இந்த யோசுவா. முற்பிதாக்களுக்கு தேவன் வாக்குப் பண்ணின கானான் தேசத்தை எழுத்தின் படியே மிகத் துள்ளியமாக இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தரமாக்கித் தந்தவர் இந்த யோசுவா.

இவர் மிகச் சிறந்த வேத புருஷர், இவரின் வாழ்க்கைச் சம்பவங்கள் எனது வாலிப நாட்களில் பெரிய பாதிப்பை எனக்குள் ஏற்படுத்தியது என்பது உண்மை.

எனவே யோசுவாவைக் குறித்த இந்த சத்தியங்களை என் இனிய வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும், என்ற எண்ணத்தில் எளிய வடிவில் இஃதினை வடித்திருக்கிறேன்.

குறுக்கிடும் யோர்தான்
தடுத்திடும் எரிகோ
கவிழ்த்திடும் ஆயி
வஞ்சிக்கும் கிபியோன்

இப்படிப்பட்ட சூழ்நிலைகளை, சூழ்ச்சிகளை சுக்கு நூறாய் உடைத்து கானானை சுதந்தரிக்கும் பலத்தை, ஜெயத்தை நீங்கள் பெற்றுக் கொள்ள இந்த நூல் பெரிதும் உதவும் என்று நம்புகிறேன்.

சில சம்பவங்களின் பின்னணிகளை, சில வேத சம்பவங்களின் வரலாற்று உண்மைகளை, நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக யோசுவாவின் புத்தகத்தைக் குறித்த சில அறிமுகத்தை முதல் அதிகாரத்தில் கொடுத்துள்ளேன்.

நல்ல போர்ச் சேவகராய் ஆவிக்குரிய யுத்தத்தில் வெற்றிபெற யோசுவாவைப் போல் திட மனதாய் இருக்க தேவன் உதவி செய்வாராக.

அன்போடும் ஜெபத்தோடும்
அவர் சேவையில்
**அ. கிறிஸ்டோபர்**

## படைக்கிறேன்

அன்னை வயிற்றிலேயே தெரிந்தெடுத்து
ஆசையுடன் என்னைப் பிரித்தெடுத்து
இன்பமுடன் பெயர் சொல்லியழைத்து
ஈந்த நல் ஊழியத்திற்காய் ஸ்தோத்திரம்!
உண்மை உள்ளவன் என்றெண்ணி
ஊக்கமான கிருபைகள் பெறப் பண்ணி
எந்நாளும் வெற்றி சிறக்கப் பண்ணி
ஏந்தி வரும் தேவா ஸ்தோத்திரம்!
ஐயனே, கிருபைகளை தினமளித்தாய்
ஒன்றுமே உதவாதயென்னை எழுதவைத்தாய்
ஓய்ந்து போன நேரம் உயிர்ப்பித்தாய்
ஔஷதமாய் மாற்றிடவே மிகக் கருத்தாய்
இஃதினைப் படைக்கிறேன் ஏற்றிடுவீர்!

– **ஆக்கியோன்**



## பொருளடக்கம்

அதிகாரம்

1. யோசுவா – ஓர் அறிமுகம்
2. யுத்த வீரனாகிய யோசுவா
3. வளமான வாலிபம்
4. யோசிக்க மறந்த யோசுவா
5. தலை சிறந்த தலைவன்

# 1

# யோசுவா – ஓர் அறிமுகம்

என் இனிய வாசகர்களே! இரட்சகர் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தமிழில் எனது அளிப்பாகிய முப்பத்தோராவது வெளியீட்டை மிகுந்த ஜெபத்துடன் உங்கள் கரத்தில் சமர்ப்பிக்கிறேன்.

எனது வாலிப நாட்களில் இந்த கனமான ஊழியத்திற்கு வந்தேன், இன்று இந்த ஊழியத்தில் எல்லைகள் விரிவாக்கப்பட்டு எண்ணற்ற மக்கள் ஆசீர்வாதத்தைப் பெற்று வருகின்றனர். குறிப்பாக எனது இலக்கியப் பணி கடல் கடந்து கர்த்தரின் ஜனத்தை உற்சாகப் படுத்துகிறது.

ஆனால் இத்தகைய பேருகளை நான் அடைவதற்கு கடந்து வந்த பாதையில் சந்தித்த சோதனைகளுக்கு கணக்கே இல்லை! ஏன் இந்த பாடுகள்? ஏன் இந்த வாழ்க்கை என்று நொந்து வெந்து தட்டுத் தடுமாறிய நாட்கள் எத்தனையோ உண்டு.

ஒரு போதகரின் மகன் போதகனாக வருவதும், அவ்வூழியத்தில் நிற்பதும் எளிது. அவ்வண்ணமே ஒரு சுவிசேஷகனின் மகன் சுவிசேஷகனாக அறிமுகமாவதும்,





வளர்வதும் எளிது. ஆனால் எந்தப் பின்னணியும் இல்லாமல் இந்த ஊழியத்திற்கு வந்த நான் ஒவ்வொரு அடிகளையும் மிகுந்த கண்ணீரோடும் பிரயாசத்தோடும் எடுத்து வைத்தேன்.

அந்நாட்களில் எனக்கு பெரிதும் நம்பிக்கையூட்டிய ஒரே வேதாகமப் பாத்திரம் யோசுவா மாத்திரமே.

யோசுவா, வேதத்தில் உள்ள அற்புதமான தேவ மனிதர். மோசேக்குப் பிறகு அவன் ஊழிய ஸ்தானத்தில் அவனது மகன்களாகிய இருவரும் வரவில்லை, மாறாக லேவிக் கோத்திரத்தைச் சாராதவனும், எப்பிராயீம் கோத்திரத்தைச் சார்ந்தவனுமாகிய யோசுவா இஸ்ரவேலை நடத்திய இரண்டாவது பெரிய தலைவனாக எழுந்ததை எண்ணிப் பாருங்கள்.

தேவனால் முன்குறிக்கப்பட்ட மனிதனுக்கு எந்த விதப் பின்னணியும் தேவையில்லை, எந்த மனிதனின் முதுகும் தேவையில்லை என்பதை யோசுவாவின் வாழ்க்கை மூலம் நாம் தெளிவுடன் அறிந்து கொள்கிறோம்.

இந்த யோசுவாவின் வாழ்க்கையை சிந்தித்து தேவபெலனைப் பெற்று எனது ஊழியத்தின் பாதையில் என்னைத் தேற்றிக் கொண்ட நேரங்கள் பல உண்டு.

இந்தப் புத்தகத்தில் யோசுவாவைக் குறித்து தியானிக்கப் போவது உண்மையானாலும் வேதாகமத்தில் உள்ள யோசுவாவின் புத்தகத்தைக் குறித்த சில குறிப்புகளை முதற்கண் சிந்திக்கப் போகிறோம்.

## யோசுவாவின் புத்தகம்

முழு வேதாகமத்திலும் முதன்முதலில் ஒரு தனிப்பட்ட நபரின் பெயரைத் தாங்கி வரும் புத்தகம் இதுவே.

இது வேதாகமத்தில் ஆறாவது ஆகமம். இதில் அறுநூற்று ஐம்பத்தெட்டு வசனங்கள் கொண்ட இருபத்து நான்கு அதிகாரங்கள் இருக்கிறது.

இதை உபாகமத்தின் தொடர்ச்சி என்றே சொல்ல வேண்டும். காரணம் உபாகமத்தின் கடைசி அதிகாரத்தின் கடைசிப் பகுதி மோசேயின் மரணத்தைப் பற்றி கூறுகிறது. அவ்வண்ணமே யோசுவா 1:1 கர்த்தரின் தாசனுகிய மோசே மரித்த பின்பு என்று துவங்குகிறது.

முந்தின புத்தகமாகிய உபாகமம் இஸ்ரவேலர் எகிப்தை விட்டுப் புறப்பட்டதையும் வனுந்தரத்தில் பயணம் செய்ததையும் நமக்கு சுருக்கமாகச் சொல்கிறது. யோசுவாவின் புத்தகமோ அவர்கள் கானுனை எப்படி சுதந்தரித்தார்கள் என்பதை விவரமாக தெரிவிக்கிறது.

மோசேயின் நூல்கள் தேவன் இஸ்ரவேலருக்கு கொடுத்த தீர்க்க தரிசனங்களையும், வாக்குத் தத்தங்களையும் நமக்கு எடுத்துச் சொல்கிறது. யோசுவாவின் புத்தகமோ அவைகள் எப்படி நிறைவேறியது என்பதை தெளிவுபடுத்துகிறது.

இதுவரை நிறைவேறாத எந்த தீர்க்க தரிசனமும் யோசுவாவின் புஸ்தகத்தில் இல்லை.

யோசுவா முதல் எஸ்தர் வரை உள்ள சரித்திர நூல்கள் பிரிவில் முதலாவது முறையான சரித்திரப் புத்தகம் இதுவே.

மோசேயின் மரணத்திலிருந்து துவங்கி யோசுவாவின் மரணம் வரை உள்ள கால் நூற்றாண்டு சம்பவங்களை மாத்திரமே இந்நூல் விவரிக்கிறது.

## காலமும் ஆசிரியரும்

வேதத்தின் முதல் ஐந்து நூல்கள் மோசேயினால்எனவே யோசுவாவின் புத்தகம் சொல்லும் சம்பவங்களை **மட்டுமல்ல**





யோசுவாவே எழுதினார் என்பது பொதுவாக பலராலும் ஒப்புக்கொள்ளப்படுகிற காரியமாகும்.

எனினும் யோசுவாவின் புத்தகத்தின் கடைசி அதிகாரத்தில் யோசுவாவின் அடக்கம் மற்றும் அக்காலப் பிரதான ஆசாரியனுகிய எலெயாசாரின் அடக்கம் ஆகிய சம்பவங்கள் இருப்பதை மேற்கோள் காட்டி இதை யோசுவா எழுதியிருக்க முடியாதென்று சிலர் கூறுகிறார்கள்.

ஆனுல் அதே கடைசி அதிகாரம் முதல் இருபத்தைந்து வசனங்களை வாசித்துப் பார்த்தால்சம்பவங்களை நேரில் கண்ட நபராகிய யோசுவவைத் தவிர வேறு ஒருவாராலும் இவ்வளவு தெளிவாக எழுதியிருக்க முடியாது என்பதை அறியலாம்.

எனவே யோசுவா எழுதிய குறிப்புகளை சீர்படுத்தி பின் சம்பவங்களைச் சேர்த்து எலெயாசாரின் மகனுகிய பினெகாஸ் என்னும் ஆசாரியன் அதை வடிவமைத்தார் என்பதே பொருத்தமாகும். (யோசு 24:33)

காலக் கணக்கின்படி கி.மு. 1400 முதல் கி.மு. 1375 வரையுள்ள இச்சம்பங்கள் கி.மு. 1375ல் தொகுக்கப்பட்டு இருக்கலாம் என்பதை பொதுவாக எல்லாத் திருமறை வரலாற்று ஆசிரியர்களும் ஒப்புக்கொள்கிறார்கள்.

## இப்புத்தகத்தின் பிரிவுகள்

மோசே மரித்தபின் துக்கங் கொண்டாடுதல் முடிந்த வெகு சீக்கிரத்திலேயே யோசுவாவின் தலைமையில் இஸ்ரவேலர் யோர்தானைக் கடந்து கானுனில் கால்வைத்து விட்டனர். அதன்பின் யோசுவா அவர்களின் வீதங்களை பங்கிட்டுக் கொடுக்க, அவர்கள் கானுனை சுதந்தரித்துக் கொண்டார்கள்.

எனவே யோசுவாவின் புத்தகம் சொல்லும் சம்பவங்களை அடிப்படையாக வைத்து இப்புத்தகத்தை மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. கானானுக்கு ஆயத்தப் படுதல் அதி 1:1 – 5:15
2. கானானை அடைதல் – அதி 6:1 – 12:24
3. கானானை அனுபவித்தல் – அதி 13:1 – 22:34

இவைகளைத் தவிர மீதமுள்ள கடைசி இரண்டு அதிகாரங்கள் யோசுவாவின் கடைசி காலத்தையும் அறிவுரையையும் நமக்குத் தருகிறது.

## புத்தகத்தின் மையக் கருத்து.

தேவன் வாக்குப் பண்ணினதை நமக்குத் தருவதற்கு அவர் வல்லவர் என்றும், விசுவாசத்தால் நாம் கிரியை செய்து சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்றும், தெளிவு படுத்துவதோடு விசுவாசத்தை விட்டு மாம்சக் கிரியையில் இறங்கினால் தோல்வியையும் நஷ்டத்தையும் அடைவோம் என்றும் வெகுவாக நம்மை எச்சரிக்கிறது.

## யோசுவா புத்தகத்தில் கிறிஸ்து

பொதுவாக பழைய ஏற்பாட்டில் உள்ள எல்லா புத்தகங்களிலும் கிறிஸ்துவைக் குறித்த முன்னடையாளம் அல்லது கிறிஸ்துவைக் குறித்த தீர்க்க தரிசனம் கண்டிப்பாக இருக்கும். இதுவே நமது வேதத்தின் சிறப்பு. அதற்கு சில குறிப்புகளைத் தருகிறேன் கவனியுங்கள்.

**ஆதியாகமத்தில் –** ஆதாம், நோவாவின் பேழை, ஈசாக்கு யோசேப்பு மற்றும் பலர்

**யாத்திராகமத்தில் –** ஆரோன், ஆசரிப்புக் கூடாரம்





**லேவியராகமம் –** பலிகள், போக்காடு

**எண்ணாகமத்தில் –** வெண்கல சர்ப்பம், அடிக்கப்பட்ட கன்மலை, யாக்கோபில் ஓர் நட்சத்திரம்.

**உபாகமத்தில் –** என்னைப் போல் ஓர் தீர்க்கத்தரிசி மோசே

இப்படி முதல் ஐந்து ஆகமங்களில் காணப்படுகிற இக்காரியம் யோசுவாவின் புஸ்தகத்திலும் தொடர்வதை நாம் சிந்திக்க கடமைப் பட்டிருக்கிறோம்.

1. யோசுவா என்ற பெயருக்கு யெகோவாவின் இரட்சிப்பு என்று பொருள். இந்த எபிரெய வார்த்தைக்கு இணையாக பயன்படுத்தப் பட்டுள்ள வார்த்தையே இயேசு எனவே யோசுவா என்பதற்கும் இயேசு என்பதற்கும் பொருள் ஒன்றே.

2. யோசுவா ஐந்தாம் அதிகாரத்தில் யோசுவா ஒரு தரிசனத்தைக் காண்கிறார், அதில் கர்த்தருடைய சேனையின் அதிபதி நின்றார். பழைய ஏற்பாட்டில் கிறிஸ்து தூதனானவர் என்றும், அதிபதி என்றும், அறியப்பட்டார் என்பது உண்மை யோசுவா 5:15 ஐயும் யாத் 3:23 ஐயும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

3. எரிகோவின் அலங்கத்தில் குடியிருந்த ராகாப் தனது வீட்டில் பின்புறம் கட்டி தொங்கவிட்டிருந்த சிவப்பு நிறக் கயிறு கிறிஸ்துவுக்கு அடையாளமாக இருக்கிறது. அந்த சிவப்பு நிறக் கயிற்றின் நிமித்தமே எரிகோவின் அழிவிலிருந்து ராகாப் தப்புவிக்கப்பட்டாள்.

**மட்டுமல்ல யோசுவா பரிசுத்த ஆவியானவருக்கும் நிழலாட்டமாய் இருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.**

மோசே இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து இரட்சித்து வெளியே கொண்டு வந்தார், யோசுவா, விடுதலைப்பெற்ற இஸ்ரவேலரை கானுனுக்குள் வழி நடத்தினுர், எனவே இந்தக் கோணத்தில் பார்க்கும் போது மோசே கிறிஸ்துவுக்கும், யோசுவா பரிசுத்த ஆவியான வருக்கும் முன்னடையாளமாய் இருக்கிறார்கள்.

## நூனின் குமாரனுகிய யோசுவா

யோசுவாவின் பெயர் எங்கெல்லாம் முக்கியப்படுத்தி கூறப்படுகிறதோ, அங்கெல்லாம் நூனின் குமாரனுகிய யோசுவா என்று தகப்பனின் பெயரோடு எழுதப்பட்டிருப்பதை நாம் சிந்தித்துப் பார்க்க கடமைப் பட்டுள்ளோம்.

எப்பிராயீம் கோத்திரத்தில் வந்த நூன் என்பவரைக் குறித்து எந்தத் தகவலும் வேதத்தில் இல்லை, நூன் என்பவர் யார் என்று எவரேனும் கேட்டால் அவர் யோசுவாவின் தகப்பன் என்பதைத் தவிர வேறு பதில் சொல்ல வாய்ப்பில்லை.

எந்த முக்கியத்துவம் இல்லாமல் போனுலும் யோசுவாவைப் பெற்ற பாக்கியத்திற்காகவே வேதத்தில் அவர் பெயர் பலமுறை எழுதப்பட்டுள்ளதை எண்ணிப் பாருங்கள்.

கர்த்தர் எனக்கு கொடுத்துள்ள விலையேறப் பெற்றுள்ள ஆசீர்வாதங்களில் முக்கியமான காரியம் ஒன்று உண்டானுல் அது எனது தகப்பனுர் அவர்களே. நான் சோர்ந்து போகும் நேரங்களில் ஓடிவந்து இனிய வார்த்தை சொல்லி உற்சாகப் படுத்துவார்.

பல ஆண்டுகளுக்கு முன்பு அவர் சொன்ன ஒரு வார்த்தை இன்னும் என் செவிகளில் ஒலித்துக்





கொண்டேயிருக்கிறது. அந்த வார்த்தை வரிகள் என்ன தெரியுமா? தம்பி, அலெக்ஸாண்டரின் மகன் கிறிஸ்டோபர் என்பதை விட பாஸ்டர் கிறிஸ்டோபரின் அப்பா நான் என்று சொல்லிக் கொள்ள பெருமைப்படுகிறேன் உன்ஞல் எனக்கு இந்த சந்தோஷம் பெருக உதவி செய்.

ஆம் வாலிப தம்பி தங்கையரே உங்கள் பெயரைச் சொல்லும் போது உங்களின் பெற்றோர் பெயர் உயர வேண்டும், மதிப்பு கூட வேண்டும்.

யூதாஸின் தகப்பனுகிய சீமோனின் பெயர் வேதத்தில் எழுதப் பட்டுள்ளது. ஆனுல் அந்தப் பகுதியை வாசிக்கும் போது சீமோனுக்கு பெயர் வருவதில்லை ஆனுல் யோசுவா தனது பெயருக்கு முன்னுல் தனது தகப்பனின் பெயர் சொல்லும் அளவிற்கு பெருமைப்பட வாழ்ந்தான் என்பதை யோசித்து நீங்கள் நடவுங்கள்.

நூனின் குமாரனுகிய யோசுவா என்று குறிக்கப் பட்டிருப்பதற்கு மற்றொரு காரணம் உண்டு. வேதத்தில் எழுதப்படாவிட்டாலும் யோசுவா என்ற பெயரில் அநேகர் அந்நாட்களில் இருந்தனர். அவர்களினின்று இவனை வித்யாசப்படுத்திக் காண்பிக்கவே நூனின் குமாரனுகிய யோசுவா என்று ஆவியானவர் சிறப்பாய் எழுதியுள்ளார்.

வேதப்புத்தகத்தில் யோசுவா என்ற பெயரில் நான்கு நபர்கள் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க காரியம். அவர்களைக் குறித்து நீங்கள் சிறிதளவாவது தெரிந்து வைத்திருப்பது நல்லது.

**1.** I சாமு **6:14.....** பெத்ஷி மேசில் இருந்த ஒரு மனிதன், பெலிஸ்தியர் தேசத்திலிருந்து உடன்படிக்கைப் பெட்டியை சுமந்து கொண்டு வந்த மாடுகள் இவனுடைய வயலில் வந்து தான் நின்றது.

2. II ராஜா 23:8 யோசியாவின் நாட்களில் இருந்த எருசலேமின் அதிபதி, இவன் தனது பெயரை எருசலேமில் உள்ள ஒரு வாசலுக்கு வைத்திருந்தான்.

3. ஆகாய் 1:14, இவன் செரூபாபேல் காலத்தில் இருந்த பிரதான ஆசாரியன், இவனைக் குறித்த குறிப்புகளை சகரி 3:1, 9:3 ஆகிய வசனங்களில் வாசிக்கலாம்.

4. யோசு 1:1 நூனின் குமாரனாகிய யோசுவா. இவரைக் குறித்துதான் தொடர்ந்து இந்நூலில் தியானிக்கப் போகிறோம்.

யோசுவாவின் பெற்றோர் அவனுக்கு ஓசேயா என்று பெயரிட்டு இருந்தனர் எண் 13:8 ஓசேயா என்பதற்கு அவர் இரட்சிப்பார் என்று பொருள்.

எகிப்தில் இஸ்ரவேலர் அடிமைத்தனத்தில் இருந்தபோது இவன் பிறந்தான், மோசே பார்வோனுக்கு அஞ்சி மீதியான் தேசத்திற்கு ஓடின காலக் கட்டத்தில் இந்த யோசுவாவுக்கு அதிக பட்சம் ஐந்து வயது மாத்திரமே.

இஸ்ரவேலரை விடுதலையாக்க பின்னும் நாற்பது ஆண்டுகள் கழித்து மோசே எகிப்திற்கு வந்தபோது யோசுவாவிற்கு நாற்பத்தைந்து வயது.

நாற்பது ஆண்டுகால வனாந்தர பயணம் முடித்து யோர்தானைக் கடக்கும் போது வயது எண்பத்தைந்து (45 + 40) கானானை சுதந்தரிக்க ஐந்து ஆண்டுகள், அதன்பின் இருபது ஆண்டுகள் வாழ்ந்தான். (85+25) நூற்றுப் பத்தாவது வயதில் யோசுவா மரித்தான்.

யோசுவாவின் பெற்றோர் அடிமைத் தனத்தின் கொடுமை தாங்காமல் தேவன் தங்களை விடுவிக்க இரட்சகரை எழுப்ப





மாட்டாரா என்று ஏங்கித் தவித்த காலத்தில் யோசுவா பிறந்த படியால் **அவர் இரட்சிப்பார்** என்று பொருள்பட விசுவாசத்தினால் பெயர் வைத்தார்கள்.

வளர்ந்து வரும் பருவத்தில் எகிப்தின் இராணுவத்தில் யோசுவா பணி புரிந்ததாக நம்பத் தகுந்த திருமறை வரலாற்று நூல்கள் நமக்குச் சொல்கின்றன.

பிற்காலத்தில் மோசேக்கு உதவிச் செய்ய மிகச் சிறந்த ராணுவத் தலைவன் தேவனுக்கு தேவைப்பட்டது, எதையும் முன்னறிந்து செயல்படும் கர்த்தர் மோசேயை பார்வோனின் அரண்மனையில் வளரச் செய்தது போல யோசுவாவை பார்வோனின் சேனையில் பயிற்றுவித்தார்.

மோசேக்கும் யோசுவாவிற்கும் எப்படி நெருக்கம் ஏற்பட்ட தென்று தெரியவில்லை. மோசேக்கும் யோசுவாவிற்கும் ஒரு தலைமுறை வயது வித்தியாசம்இருந்தது. எகிப்தை இஸ்ரவேலர் விட்ட போது மோசேக்கு எண்பது ஆண்டுகளும், யோசுவாவிற்கு நாற்பது ஆண்டுகளுமாய் இருந்தது. இவர்கள் தேவனால் ஐக்கியப் படுத்தப்பட்டனர் என்பது சிறப்பு.

ஒரு முதிர்ந்த ஆவிக்குரிய தலைவருடன் தலைமுறை இடைவெளியுள்ள ஒரு வாலிபன் இருக்கக் கண்டால் அந்த வாலிபனை அலட்சியப் படுத்தாதீர்கள். அந்தத் தலைவனையும் அவமானப் படுத்தாதீர்கள். இது தேவன் ஐக்கியப் படுத்தியுள்ள இணை என்று மகிழ்ச்சி அடையுங்கள்.

தலைவர்களே,! தலைவர்களே! உங்களை ஒன்று கேட்டுக் கொள்கிறேன் உங்களுக்கு அடுத்தபடியாக வருவதற்கு உங்களுக்கு அடுத்த வயதினரை ஆயத்தப்படுத்தாதிருங்கள்.

உங்களுக்குப் பிறகு அடுத்த வருடமே அவர் நீங்கள் இருக்கும் இடம் வந்து விடுவார். அடுத்த தலைவரை ஆயத்தப்படுத்த அவகாசம் அவருக்கு கிடைக்காது.

உங்களுக்கு, அடுத்த தலைமுறையை ஆயத்தப் படுத்துங்கள். அது மோசே யோசுவாவை ஏற்படுத்தியதைப்போல் இருக்கும் உங்கள் ஊழியத்திற்கு ஆசீர்வாதமாகவும் இருக்கும்.

தனது சொந்த குமாரர்களைவிட யோசுவாவை மோசே அதிகமாக நேசித்திருப்பார் என்று நம்புகிறேன் வேதத்தில் இதைக் குறித்த ஆதாரம் இல்லாமல் போனாலும் மோசேக்கும் யோசுவாவுக்கும் உள்ள நெருக்கத்தை காணும் போது இஃது சரியென்றே தோன்றுகிறது.

கானுன் தேசத்தை வேவுபார்க்க கோத்திரத்திற்கு ஒருவர் என்று தேர்வு செய்யப்பட்ட போது நூனின் குமாரனாகிய யோசுவா தேர்வு செய்யப்பட்டார்.

மோசே இந்த ஓசேயாவை கானானுக்கு அனுப்பும் போது யோசுவா என்று பெயர் மாற்றம் செய்தார். யோசுவா என்றால் யெகோவா இரட்சிப்பார் என்று பொருள் தீர்க்கதரிசியாகிய மோசேயின் பெயர் மாற்றத்தின் படியே யோசுவா யுத்தங்களை செய்து வெற்றிகளைக் கண்டு கானானை பிடித்து மக்களுக்கு பகிர்ந்து கொடுத்தான்.

அந்த யுத்த வீரனைக் குறித்து, காரிய சித்தியுள்ள வனைக் குறித்து, கர்த்தரின் ஊழியக்காரனைக் குறித்து இனிவரும் அத்தியாயங்களில் காண்போம்.



# 2

# யுத்த வீரனாகிய யோசுவா

இஸ்ரவேலின் நம்பிக்கை நட்சத்திரமும், இரண்டாம் தலைவருமாகிய யோசுவாவைக் குறித்து வேதப் புத்தகத்தில்முதல் முதல் வருகிற குறிப்பை நாம் கவனித்துப் பார்க்க கடமைப் பட்டிருக்கிறோம்.

மோசே, சாமுவேல், போன்றவர்களைக் குறித்து வேதத்தில் எழுதப்பட்ட விதத்திற்கும், யோசுவாவைக் குறித்து எழுதப் பட்ட விதத்திற்கும் பெரிய வித்தியாசம் உண்டு.

முந்தினவர்கள், பெற்றோர் – பிறப்பு போன்ற பின்னணி யோடு வேதத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளனர், ஆனால் யோசுவாவோ மோசேயின் வார்த்தையைக் கேட்டு யுத்தம் செய்யும் வீரனாக திடிரென்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளார்.

அப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி நீ நமக்காக மனிதரைத் தெரிந்துக் கொண்டு புறப்பட்டு அமலேக்கோடு யுத்தம் பண்ணு நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக் கொண்டு நிற்பேன் (யாத் 17:9)

அமலேக்கியர்கள் இந்த இஸ்ரவேலர்களுக்கு எதிராக ரெவிதீம் என்னுமிடத்தில் யுத்தம் பண்ண வந்தார்கள். இங்கே ஒரு சரித்திர சம்பவத்தை சொல்லி விட்டு திரும்பி தொடர்ச்சிக்கு வர விரும்புகிறேன். யாத்திராகமத்தில் சீன் வனாந்தரத்திற்குப் பிறகு ரெவிதீமில் முதலில் பாளயம் இறங்கினதகாக் கூறப்பட்டுள்ளது.

உண்மையில் அவர்கள் பாளையம் இறங்கின முக்கியமான இடங்களில் முதல் இடம் ரெவிதீம். மற்றபடி எண்ணாகமம் 33:12, 13 ஆகிய வசனங்களை வாசித்துப் பார்த்தால் சீன் வனாந்தரத்தை விட்டு தோப்காவிலும், அதன்பின் ஆலூசிலும் பாளையம் இறங்கினார்கள். ஆலூசை விட்டு புறப்பட்டு ரெவிதீமில் பாளயம் இறங்கினார்கள். ரெவிதீம் என்பதற்கு இளைப்பாறுதல் என்று அர்த்தம்.

இங்கே ஒரு காரியத்தைக்கவனிக்க வேண்டும், ரெவிதீம் என்கிற இளைப்பாறுகிற இடத்திற்கு வந்தார்கள், ஆனால் அங்கோ அவர்களுக்கு பல யுத்தம் காத்திருந்தது.

நமது வாழ்வில் சில வேளைகளில் சில ஆசீர்வாதங்களைக் கண்டவுடன், அப்பாடா ஒரு இளைப் பாறுதலின் வேளை வந்து விட்டது என நினைக்கிறோம். கவனியுங்கள் ரெவிதீமில் இஸ்ரவேலருக்கு இரண்டு விதமான யுத்தங்கள் எதிர் கொண்டன. ஒன்று தண்ணீர்ப் பிரச்சனை, மற்றொன்று அமலேக்கியரின் கூட்டம். இதைப் போலவே நமது தேவைகளுக்காக ஒரு போராட்டம் நமது சத்துருக்களுக்கு எதிராக ஒரு போராட்டம் நம்மை சூழ்ந்து கொள்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

யோசுவா புத்தகம் 11:23 ல் யுத்தம் ஒய்ந்ததினால் தேசம் அமைதலாய் இருந்தது என்று எழுதப்பட்டுள்ளது. அதாவது, எகிப்தை விட்டது முதல் கானானை அடையும் வரை யோசுவா





யுத்தம் செய்து கொண்டே இருந்தார் என்பது குறிப்பிடத் தக்க காரியமாகும்.

பாவ உலகமாகிய எகிப்தை விட்டு இரட்சிப்பின் வாழ்க்கையை துவங்குகிற நாள் முதல் கானானாகிய கர்த்தருடைய வருகையை காணுமட்டும் யுத்தக் களத்தில் நாம் நின்றே ஆக வேண்டும், ஜெயங் கொள்கிறவனே தேவனுடைய சிங்காசனத்தில் அமர முடியும்.

எழுத்தின்படியான கானானை சுதந்தரிக்க யோசுவா எழுத்தின் படியான ஜாதிகளையும்ராஜாக்களையும் முறியடித்தார். ஆவிக்குரிய கானானை சுதந்தரிக்கப் போகிற நாமும் ஆவிக்குரிய வாழ்வில் நம்மை எதிர்க்கும் சில காரியங்களுக்கு விரோதமாய் யுத்தம் செய்ய வேண்டியது அவசியம்.

ஒன்றை நாம் புரிந்த கொள்ள வேண்டும் நமக்கு விரோதமாக சில மனிதர்கள், சில மதத்தினர், சில அரசாங்கங்கள் வரலாம், அவர்களை நாம் எதிரிகள் என்று எண்ணிவிடக் கூடாது, பகைக்கவும் கூடாது. உலகத்தில் எந்த மனிதனும் நமக்கு எதிரி கிடையாது.

ஆனால் அந்த மனிதர்கள், மதங்கள், அரசாங்கங்கள் ஆகியவற்றிற்குப் பின்னால் சில தீய சக்திகள், பொல்லாத ஆவிகள் நின்று கொண்டு நமக்கு எதிராய் யுத்தம் செய்கின்றன என்பதை மறந்து விடக் கூடாது.

இதை சரியாக இனம் கண்டு கொண்டு அவைகளை வீழ்த்த வேண்டியது நமது கடமையாகும். இயேசுவின் உலக ஊழியம் நிறைவேற்ற வேண்டிய கடைசிக் கால கட்டத்தில் பேதுரு இயேசுவை பார்த்து அன்பொழுக, நீர் சிலுவைக்குப் போகக் கூடாது. என்றான். ஆனால் இயேசுவோ உடனே

எனக்கு பின்னுலே போ சத்தானே என்றார். சற்று யோசித்துப் பாருங்கள் சாத்தானின் ஆவி, நமக்கு விரோதமாகப் பேசி எதிர்ப்பது போலவே சில வேளைகளில் சாதகமான வார்த்தைகளையும் பேசி தேவ சித்தத்தை விட்டு நாம் விலகுவதற்கு ஏதுவாக சாவுமணி அடித்து விடுவான் என்பதை அறிந்திடல் வேண்டும்.

எகிப்தை விட்டு இஸ்ரவேலர் வெளியேறின போது பெலிஸ்தியர் தேசம் வழியாக கானுன் தேசத்திற்கு சுலபமாக செல்ல முடியும் என்றும், எனினும் பெலிஸ்தியர் தேசம் வழியாய்ச் சென்றால். அவர்கள் யுத்தத்திற்கு எழும்பி வருவார்கள், அப்படி யுத்தத்தைச் சந்தித்தால் ஜனங்கள் மனமடிந்து போவார்கள் என்று தேவன் அவர்களை வனுந்திர மார்க்கமாய் நடத்தினுர் என்பதை யாத் 13:17 ன் மூலம் நாம் தெளிவாய் அறிந்து கொள்கிறோம்.

பெலிஸ்தரின் யுத்தத்தை தேவன் தவிர்த்தது மாத்திரமல்ல செங்கடலைப் பிளந்து அற்புதம் நிகழ்த்தி நடத்தினுர் என்று யாத் 14:22 கூறுகிறது.

பிரியமானவர்களே நாம் ஆவிக்குரிய வாழ்வை துவங்கும் போது போராட்டங்களைக் கண்டால் நாம் சோர்ந்து போவோம் என்று எண்ணி தேவன் யுத்தங்களை தவிர்த்து நாம் எண்ணுவதற்கு மேலாக அற்புதங்கள் செய்கிறார்.

அதுவே வாழ்க்கை முழுவதும் கிடைக்கும் என்று எண்ணி விடக் கூடாது. அது தேவனின் விருப்பமல்ல. நாம் யுத்தங்களை சந்தித்து, நாமே ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்பது தேவனின் சித்தம்.





ஆரம்ப கால கிறிஸ்தவ ஜீவியத்தில் அற்புதங்களையும் ஆசீர்வாதங்களையும் கண்ட நீங்கள் திடீரென வேதனைகளையும் சோதனைகளையும் சந்திக்கிறீர்களா? அப்படியானுல் மிகச் சரியான பாதையில் நடக்கிறீர்கள் என அர்த்தம். அதே வேளையில் அந்த சோதனைகளையும், வேதனைகளையும் நீங்கள் நித்தம் ஜெயித்துக் கொண்டே வர வேண்டும்.

ஒரு வேளை அந்த சோதனை – வேதனையில் நீங்கள் தோற்றுப் போனுல் – சோர்ந்து போனுல் நீங்கள் சரியான பாதையில் இருந்தாலும் சரியான நிலையில் இல்லை, உங்கள் யுத்தமுறை சரியில்லை என்று அர்த்தம்.

நீங்கள் ஆரம்பத்தில் சந்திக்கும் எந்த சோதனையிலும் தோற்றுப் போக மாட்டீர்கள் என்பது வேதம் தரும் உத்தரவாதம்.

யுத்தத்தைக் கண்டால் மனமடிந்து போவார்கள் என்று யுத்தத்தையே தேவன் தவிர்ப்பது ஒரு காலம்.

யுத்தத்தில் தோற்றால் மனமடிந்து போவார்கள் என்று எல்லா யுத்தத்திலும் வெற்றி தருவது ஒரு காலம்.

இந்த இரண்டு கால கட்டத்திற்குப் பின்னுல் வெற்றி தோல்வி என்ற இரண்டு நிலைகளையும் தேவன் தருகிற ஒரு காலக் கட்டமும் உண்டு.

முதல் அனுபவம் பிறந்த குழந்தைகளுக்காக, இரண்டாவது அனுபவம் வளரும்குழந்தைகளுக்காக, மூன்றாம் அனுபவம் தேறும் விசுவாசிகளுக்காக என்பதை மறந்து விடக் கூடாது.

கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார், நீங்கள் சும்மா இருப்பீர்கள், என்ற யாத் 14:14 வசனத்தைப் பாருங்கள் நாம் தோற்றுவிடக் கூடாது என்பதற்காக தேவனே நமக்காக

யுத்தம் செய்கிறார், தேவன் யுத்தம் செய்தால் தோற்பாரா? மாட்டாரே எனவே நமது ஆவிக்குரிய யுத்தத்தில், வெற்றி நமக்கு தான் என்பதை சிந்தனையில் வையுங்கள்.

இதிலும் மேலான ஒரு நிலை உண்டு. அவர் நம்மை யுத்தத்திற்கு பழக்குவிக்கிறார், அதனுல் அவர் அல்ல நாமே யுத்தம் செய்ய வேண்டும், என்று அவர் விரும்புகிறார். இது ஒரு கடினமான போராட்டம் அல்ல, பவுல் சொல்கிற படி நல்ல போராட்டம். அதாவது நமக்கு எப்போதும் வெற்றியை தேடித் தருகிற போராட்டம் என்பதை நினைவில் வையுங்கள்.

நமக்கு எதிராக வருகிற யுத்தம் சாதாரண அமைப்பு அல்ல மிகவும் வலிமையும் ஆபத்தும் நிறைந்த யுத்தம் என்பதை மறந்து விடக் கூடாது. நமது பெலன் எவ்வளவு என்பதை தெரிந்து இருப்பதை விட எதிராளியின் பெலன் எவ்வளவு என்பதை தெரிந்து வைத்திருப்பதே யுத்தக் கலையின் இரகசியம்.

இதை சிலர் அறிய முற்படாமல் தங்களைத் தாங்களே பலவான்கள் என்று எண்ணி அலட்சியப் போக்கோடே யுத்தத்திற்கு செல்வதால் மூக்குடைபட்டு உடனே மாய்ந்து போகிறார்கள். நமது போராட்டம் எந்த மனிதனோடும் அல்ல என்பதை வேதம் தெளிவாய் சொல்கிறதை நீங்கள் முதற்கண் அறிந்திடல் வேண்டும் எபே 6:12 ஐ கவனித்துப் பாருங்கள்.

**மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல**

1. துரைத்தனங்களோடும்
2. அதிகாரங்களோடும்
3. இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதியோடும்.





4. வான மண்டலத்தில் உள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம்உண்டு.

ஒரு பெரிய கூட்டணியே நமக்கு எதிராக யுத்தம் செய்ய புறப்பட்டு இருப்பதை கவனித்துப் பாருங்கள். இப்படிப்பட்ட பலம் வாய்ந்த சேனையோடு ஏனோ தானோ வென்று நாம் மோதினால் சுக்கு நூறாக உடைந்து போவோம் என்ற உண்மையை மறந்து விடாதீர்கள்.

சில மனிதர்கள் நமக்கு எதிராக பேசும் போதும், செய்யும், போதும் அவர்களை நமக்கு எதிரியாக கருதிவிடக் கூடாது. காரணம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் நமக்கு யுத்தமே கிடையாது. இந்த மனிதர்களுக்கப் பின்னால் பொல்லாத ஆவிகளின் சேனை நம்மோடு யுத்தம் செய்கிறதை நீங்கள் கண்டு கொள்ள வேண்டும்.

பேதுரு, இயேசு கிறிஸ்துவைப் பார்த்து நீர் சிலுவைக்கு போகக் கூடாது என்று சொன்னபோது, அப்பாலேபோ சாத்தானே என்று இயேசு சொன்னதை சிந்தித்தால் பேதுருவை அல்ல அவனுக்குப்பின்னல் இருந்து கிரியை செய்யும் ஆவிகளையே கர்த்தர் கடிந்து கொண்டார் என்பதை அறியலாம்.

எனவே நமக்கு எதிராக வரும் எந்த காரியத்திலும் எந்த மனிதருக்குப் பின்னுலும் பொல்லாத ஆவிகளின் சேனை செயல்படுகிறதை அறிந்து சரியான முறையில் நாம் செயல்பட வேண்டியது அவசியம்.

**1. ஆவிக்குரிய ஐக்கியம் தேவை**:- பிசாசின் இராஜ்யத்தில் உள்ள ஒற்றுமையைப் பாருங்கள். அவைகள் எப்போதும் இணைந்தே செயல்படுகின்றன. சாத்தான் பரிசுத்தவான்களின் ஐக்கியத்தை உடைப்பான், அதே

வேளையில் பொல்லாத ஆவிகள் ஐக்கியமாய் இருக்கும்படி பார்த்துக் கொள்வான். இதுதான் அவனது மிகப் பெரிய பலம்.

அமலேக்கோடு யுத்தம் செய்ய யோசுவாவை மோசே ஏற்படுத்துகிற போது சொன்ன வார்த்தைகளை கவனித்துப் பாருங்கள்.

“அப்பொழுது மோசே, யோசுவாவை நோக்கி, நீ நமக்காக மனிதரை தெரிந்து கொண்டு புறப்பட்டு அமலேக்கோடு யுத்தம் செய், நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக் கொண்டு நிற்பேன்” யாத் 17:9

யோசுவா தனக்கு மோசே சொன்னபடியே செய்து அமலேக்கோடே யுத்தம் பண்ணினுன், மோசேயும் ஆரோனும் ஊர் என்பவனும் மலையுச்சியில் ஏறினுர்கள். யாத் 17:10

யோசுவா தனித்து நின்று யுத்தம் செய்யவில்லை மாறாக ஒரு கூட்டுக் குழுவே யுத்தம் செய்தது என்பதை இந்த வசனங்கள் நமக்கு காட்டுகிறது.

யுத்தக் களத்தில் யோசுவாவும் அவனுல் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும், உயர் ஸ்தலத்தில் மோசேயும் அவன் கூட்டாளிகளும் கூட்டணி யுத்தம் நடத்தினுர்கள்.

இந்த இரகசியத்தை சபை இன்று கற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். நான் தனித்து நின்று ஊழியம் செய்வேன், தனித்து நின்று ஸ்தாபிப்பேன் என எழும்புவதும் புறப்படுவதும் பெரிய ஆபத்து என்பதை சிந்தையில் வைக்க வேண்டியது மிகவும் அவசியம்.

யோசுவா மனிதரை சேர்த்துக் கொண்டு யுத்தம் செய்தது பரிசுத்தவான்களோடு ஐக்கியப்பட்டு யுத்தம் செய்வதையும், மோசேயின் கூட்டணி மலையில் சேர்ந்து இருந்தது பரிசுத்த ஆவியில் ஐக்கியப்பட்டு யுத்தம் செய்வதையும் நமக்கு காண்பிக்கிறது.





பரிசுத்தவான்களின் ஐக்கியத்தோடு யுத்தத்திற்கு புறப்படுகிறவன் எல்லா இடங்களிலும் வெற்றி பெறுவது உண்மை.

தேவன் மோசேயை பார்வோனிடத்திற்கு அனுப்பும் முன்னர் ஆரோனோடு ஐக்கியப் படுத்தினுர். அவர்கள் இணைந்தே பார்வோனை சந்தித்தார்கள். சித்தி பெற்றார்கள்.

யோசுவா – எலெயாசார் இணைந்தே கானுனை இஸ்ரவேலருக்கு பங்கிட்டு கொடுத்தார்கள்.

புதிய ஏற்பாட்டில் இயேசுவின் அனுகுமுறையும் அனுப்புமுறையும் இதை ஒட்டித்தான் இருந்தது. பவுல், பர்னபா, பவுல், சீலா, என கூட்டணி ஊழியத்தை புதிய ஏற்பாட்டில் காணலாம்.

அசுத்த ஆவிகள் ஐக்கியமாக செயல்படுகிறது. ஆனுல் ஊழியர்கள் மத்தியில் ஐக்கியத்தைப் பார்க்க முடியவில்லை, பிரிவினையின் ஆவி எங்கு பார்த்தாலும் கிரியை செய்கிறது. அதனுல்தான் தேசத்தை பற்றிப் பிடிக்க வேண்டிய அக்கினி அவிந்து போகிறது.

சில ஊழியங்கள், ஊழியர்கள் வளர ஆரம்பித்த உடனே தனித்து நிற்கும் மனப் பான்மைக்கு இடம் கொடுப்பதால் தான் கொஞ்ச காலத்திற்கு பிறகு இருந்த இடம் தெரியாமல் போகிறது என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பிரியமான ஊழியர்களே! விசுவாசிகளே! நல்ல சரியான ஆவிக்குரிய ஐக்கியம் அவசியம். நீங்கள் தனித்து யுத்தக் களத்தில் நிற்பீர்கள் ஆகில் நிச்சயம் ஒரு நாள் பாதகச் சூழ்நிலையை அடைந்தே தீருவீர்கள். காரணம் உங்களோடு யுத்தம் செய்வது தனி நபரல்ல ஒரு பெரிய கூட்டணி என்பதை நினைவில் வையுங்கள்

**2. ஆவியானவரின் ஐக்கியம் தேவை** :- யோசுவாவும் அவனது ஆட்களும் போர்முனையில் தீவிரமாய் செயல்பட் டாலும் வெற்றி தோல்வி வேறு இடத்தில் நிச்சயிக்கபட்டது, மிகப்பெரிய ஆச்சரியமாக இருக்கிறது.

மலையின் உச்சியில் இருந்து கொண்டு கோலை உயர்த்திப் பிடித்துக் கொண்டு இருந்த மோசேயின் கரங்கள் கீழே இறங்கும் போது இஸ்ரவேலர் தோல்வியையும் மோசேயின் கரங்கள் உயரும்போது அமலேக்கியர்தோல்வியையும் கண்டார்கள், என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

இந்த சம்பவத்தை பல காரியங்களோடு ஒப்பிட்டு எழுத முடியும், அவைகளை தவிர்த்து ஒரே காரியத்தை உங்களுக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மண்ணில் யோசுவா அமலேக்கோடு யுத்தம் செய்து கொண்டு இருந்த அதே நேரத்தில், விண்ணில் மலையில் மோசே வான மண்டலத்தில் இருக்கும் அமலேக்கிய ஆவிகளோடு யுத்தம் பண்ணினர் என்று நான் கருதுகிறேன்.

எனவே தான் மோசேயின் கரம் உயர்ந்த போது அமலேக்கின் ஆவி வீழ்ச்சியுற்றது, அதன் பலனுப் பூமியல் யுத்தம் செய்யும் அமலேக்கியர் வீழ்ந்து போனுர்கள் என்பதை அறியுங்கள்.

இதனை விவரிக்க வேதத்தில் சொல்லப்பட்டுள்ள ஒரு யுத்தக் களத்தை உங்களுக்கு காண்பிக்க விரும்புகிறேன். நியாதிபதிகள் புத்தகத்தில் தெபோராள் பாராக்கை சிசெரா என்கிற ராஜாவுக்கு எதிராக யுத்தம் செய்யும்படி உற்சாகப் படுத்துகிறாள்.

பாராக் ஆட்களை அழைத்துக் கொண்டு சிசெராவுடன் யுத்ததிற்கு போனுன். சிசெரா ஒடிப்போனுன், மட்டுமல்ல





யாகேல் வசத்தில் வசமாய் சிக்கி மாண்டு போகிறான். இது நடந்த சம்பவம்.

ஆனுல் தீர்க்கதரிசியாகிய தெபோராள் இந்த யுத்தத்தின் பின்னணியை விளக்கும் விதத்தைப் பாருங்கள்.

வானத்திலிருந்து யுத்தம் உண்டாயிற்று, நட்சத்திரங்கள் தங்கள் அயனங்களிலிருந்து சிசெராவுடன் யுத்தம் பண்ணிற்று (நியா 5:20)

புரிகிறதா? பாராக் – சிசெரா யுத்தம் உண்மையில் பூமியில் தான் நடந்தது, ஆனுல் அது வானத்தில் உண்டாயிற்று என்று தீர்க்கதரிசி சொல்கிறாள்.

அதாவது சிசெராவை தேவ ஜனத்திற்கு எதிராக யுத்தம் செய்யத் தூண்டிய வான மண்டலத்தில் உள்ள பொல்லாத ஆவிகளோடு தேவ தூதர்கள் (நட்சத்திரங்கள்) யுத்தம் செய்தனர்.

இன்னும் ஒரு வசனப் பகுதியை கவனிப்போம், தானியேல் தேவ சமூகத்தில் உபவாசித்து ஜெபிக்கிறார். அவரின் ஜெபத்திற்கான பதிலை ஆரம்பத்திலேயே தேவன் அனுப்பி விட்டார். ஆனுல் அந்த பதில் கொண்டு வந்த தூதன் மிக தாமதமாக தானியேலை வந்தடைகிறான். அதற்கு தூதன் சொல்லும் காரணத்தைக் கவனியுங்கள்.

உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது, உன் வார்த்தைகளின் நிமித்தம் நான்வந்தேன்.

பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி இருபத்தொரு நாள்மட் டும் என்னோடு எதிர்த்து நின்றான். ஆனுலும் பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல் எனக்கு உதவி செய்தான் தானி (10:12, 13)

இந்த வசனப் பகுதிகளை சற்று சிந்தியுங்கள். தேவ தூதனை பெர்சிய அதிபதி தடை செய்தானும். இது அந்நாட் களில் பூமியில் இருந்த பெர்சிய ராஜா அல்ல, அப்போது வான மண்டலத்தில் பெர்சியாவின் மேல் ஆளுகை செய்த பிசாசின் தூதன் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த பிசாசின் தூதனிடம் தேவ தூதன் யுத்தம் செய்து பதில் கொண்டு வந்த தூதனுக்கு உதவி செய்தான் என்பது தான் அந்த பகுதிக்கு பொருள்.

எனவே பிரியமானவர்களே! நமக்கு எதிரே வருகிற ஒவ்வொரு யுத்தத்திற்கும் இயக்கம் வான மண்டலத்தில் உள்ளது என்பதை அறிந்து மனிதர்களோடு அல்ல ஆவிகளோடு உங்கள் யுத்தத்தை நடத்த வேண்டும்.

மாம்சம் ஆவியோடு யுத்தம் செய்ய முடியாது, எனவே இந்த பொல்லாத ஆவிகளோடு யுத்தம் செய்ய பரிசுத்த ஆவியின் சேனையை அனுப்பி விட வேண்டும். அதாவது பரிசுத்த ஆவியின் நிறைவில் இந்த ஆவி மண்டலத்தை நாம் சந்திக்க வேண்டும்.

இதற்கு எளிய வழி, பரிசுத்த ஆவியில்நிறைந்து அந்நிய பாஷையில் ஜெபிக்கின்ற அனுபவமே. நாம் கருத்தோடு ஜெபிக்கின்றபோது நிலவியல் யுத்தம் செய்கிறோம். அந்நிய பாஷையில் ஜெபிக்கும் போது வான மண்டலத்தில் யுத்தம் நிகழ்த்துகிறோம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

ஆவியானவர் தேவனின் ஆழங்களை மாத்திரம் அல்ல சாத்தானின் ஆழங்களையும் தெளிவாய் அறிந்திருக்கிறார். ஆவியானவரின் துணையோடு நாம் இருக்கும்போது, நாம் இன்ன விதமாய் வேண்டிக் கொள்ள வேண்டும் என்பதை அறியாமல் போனாலும் பரிசுத்த ஆவியானவர் ஏற்ற விதமாய் வாக்குக் கடங்காத பெருமூச்சோடு விண்ணப்பம் பண்ணுவார் என்று வேதம் நமக்கு தெளிவாய் போதிக்கிறது.





இங்கே இன்னுமொரு காரியத்தை நாம் சிந்திக்க கடமைப் பட்டுள்ளோம். இந்த ஆவிகளின் சேனை நேருக்கு நேர் நம்மோடு யுத்தம் செய்வது மாத்திரமல்ல.

☆ ஒவ்வொரு மதத்திற்கு பின்னுல் இந்த ஆவிகளின் அரசாங்கம் இருக்கிறது.

☆ ஒவ்வொரு இயக்கங்களுக்குப் பின்னால் இந்த ஆவிகளின் சேனை இருக்கிறது. (உதாரணம் கம்யூனிசம்)

☆ எல்லா சமூக மையங்களின் பின்னுல் இந்த ஆவிகளின் சேனை இருக்கிறது.

(உதாரணம் யோகாசனம், ஆழ்நிலை தியானம், கராத்தே போன்ற உடற்பயிற்சிகள்)

இவைகளையும் தாண்டி இந்த ஆவிகளின் சேனை கிறிஸ்தவ உலகத்தில் உள்ள பல சபை பிரிவுகளின் பின்னுல் ஒளிந்து கொண்டு செயல்படுகிறது. அவைகளின் பெயரை பட்டியலிட விரும்பவில்லை. மாறாக அந்த ஆவிகளின் சேனை எதை முக்கியப் படுத்தும்என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

1. கிறிஸ்தவ மார்க்கம் ஆனுல் விக்கிரக ஆராதனை

2. கிறிஸ்தவ மார்க்கம் ஆனுல் அந்நிய பாஷைக்கு தடை

3. கிறிஸ்தவ மார்க்கம் ஆனால் திரித்துவம் கிடையாது.

இவைகள் உங்களுக்கு வியப்பைத் தரலாம் அல்லது இப்படி எழுதியமைக்கு என்மேல் வெறுப்பைத் தரலாம். எனினும் உண்மையைச் சொல்வதில் எனக்கேதும் அச்சம் இல்லை.

வேதத்தில் கொடுக்கப்பட்ட வசனப் பகுதியை அப்படியே தருகிறேன் நீங்கள் வாசித்துப் பார்த்து எனது கூற்றை நிதானித்துப் பாருங்கள்.

வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தை புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனசாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளக்கப் பண்ணுகிறோம்.

எங்கள் சுவிசேஷம் மறைபொருளாய் இருந்தால் கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே அது மறை பொருளாயிருக்கும்.

தேவனுடைய சாயலாய் இருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாகிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாய் இராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். II / கொரி 4:2 – 4

இந்த வசனங்களை வாசித்துப் பார்த்தால் வேதப்புரட்டு, சத்தியத்தை மறைத்தல் ஆகியவற்றில் இப்பிரபஞ்சத்தின் தேவனின் பங்கு பெரிதாய் இருக்கிறது என்பதை தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

இப்பிரபஞ்சத்தின் அதிபதி அதோடு நிற்பதில்லை, அவனது ஆதிக்கத்தை எத்திசையிலும் காலூன்றச் செய்வதில் அவன் விசேஷித்த கவனம் செலுத்துகிறான். தொடர்ந்து கொடுக்கப்படும். வசனங்களை கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

1. உலகத்தின் ஞானம் (I கொரி 3:19)

WISDOM OF THE WORLD

2. இவ்வுலகத்தின் வேஷம் (II கொரி 7:31)

FASHION OF THE WORLD





3. லௌகீக இச்சை (தீத் 2:12)

WORDLY LUST

4. உலகத்தின் அசுத்தங்கள் (II பேதுரு 2:20)

THE CORRUPTION THAN IS IN THE WORLD

5. உலகத்தில் உள்ளவைகள் (I யோவான் 2:15)

THE THINGS THAT ARE IN THE WORLD

a. கண்களின் இச்சை THE LUST OF THE EYES

b. மாம்ச இச்சை THE LOST OF THE FLESH

c. ஜீவனத்தின் பெருமை THE PRIDE OF THE WOLD

ஆக அவனது எல்லை எவ்வளவு பெரியது என்றும் அதனால் நமக்கு எவ்வளவு தொல்லை என்பதையும் தெளிவாய் உணர்ந்து ஜெபித்திடல் வேண்டும்.

இப்போது யுத்த வீரனாகிய யோசுவாவை கவனியுங்கள். அமலேக்கை எதிர்க்கும் போது இரட்டை யுத்தம்.

ஆனால் எந்த யுத்தமும் செய்யாமலேயே எரிகோவை வென்றதை கவனித்துப் பாருங்கள்.

எரிகோவை ஜெயிக்க என்ன செய்ய வேண்டும் என்பதை தேவனே சொல்லிக் கொடுத்தார், அந்த முறையை கொஞ்சமும் மாற்றாமல் யோசுவா கடைபிடித்தாலே மாபெரும் வெற்றியை பெற்றார்.

நாமும் நமது ஆவிக்குரிய போராட்டங்களில் ஒரே மாதிரியான அனுகு முறையை பயன்படுத்தக் கூடாது. கர்த்தரின் தெளிவான வழி நடத்துதல் பெற்று அவைகளை சந்திக்க வேண்டும்.

அமலேக்கை ஜெயிக்க கருத்தான, ஆவியின் நிறைவுள்ள ஜெபத்தை கடைபிடிக்க வேண்டிய நாம் எரிகோவை சுதந்தரிக்க துதித்தால் மாத்திரமே போதும்.

எரிகோவின் எதிரே இஸ்ரவேலர் இதைத்தான் செய்தார்கள். வெற்றி பெற்றார்கள். துதித்தலால் வெற்றி பெறுவதில் ஒரு காரியத்தைக் கவனிக்க வேண்டும். அமலேக்கோடு யுத்தம் செய்த போது படிப்படியாக முன்னேறி ஜெயித்தார்கள். ஆனால் ஏழுநாள் துதித்து வந்தும் எந்த படிப்படியான மாற்றமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னும் சொல்லப் போனால் ஏழாம்நாள் காலை வரை எரிகோவின் மதிலில் ஒரு சிறிய விரிசல் மற்றும் கீறல் கூட விழவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கூட இருந்தவர்கள் கூட சோர்ந்து போய், அட என்னப்பா துதித்து துதித்து என்ன கண்டோம் ஒரு சிறிய கல் கூட இது வரை விழவில்லையே என்று புலம்பி இருப்பார்கள்.

மட்டுமல்ல எரிகோவின் அலங்கத்தின் மேல் நிற்கும் எரிகோ பட்டணத்தார்கள், ஆஹா! என்ன இது வறகத்து கத்துகிறார்கள் என்று நிந்தித்து இருப்பார்கள்.

நன்றாய் கவனியுங்கள் உங்கள் போராட்டத்தை துதியால் எதிர்த்துக் கொண்டு இருக்கும்போது வெற்றி இல்லாதது போல சில மணி நேரம் மாயத் தோற்றம் தோன்றும். அதைக் கண்டு பயந்து விடக் கூடாது. துதிப்பதை நிறுத்தி விடக் கூடாது.

ஏழாம் நாள் ஏழாம் முறை யோசுவாவின் ஆட்கள் துதித்தார்கள் அல்லேலூயா! அலங்கம் ஆட்டம் கண்டது! அப்படியே விழுந்தது.

ஆக அமலேக்கியரிடம் நேரடி யுத்தம், எரிகோவில் துதிகள் வெற்றியை கொடுத்து. யோசுவா கையாண்ட





மற்றுமொரு யுத்த முறையை ஆயி பட்டணத்தின் யுத்தத்தின் போது காண்கிறோம்.

யோசுவா 8 ஆம் அதிகாரம் 4 ஆம் வசனத்தை கவனித்துப் பாருங்கள் நீங்கள் பட்டணத்தின் பின்னாலே பதிவிருக்க வேண்டும். யுத்த முறையில் பதிவிருத்தல் என்பது தனிப்பட்ட முறை. இது தேவன் சொல்லித் தந்த முறைகளில் ஒன்று.

யுத்த சேனையில் ஒரு பகுதி பதிவிருக்க வேண்டும். மற்ற சேனை யுத்தத்திற்கு செல்ல வேண்டும். எடுத்த எடுப்பிலேயே ஆட்களை வெட்ட வில்லை, மாறாக யோசுவாவும் இஸ்ரவேலர்களும் அவர்களுக்கு முன்பாக முறிந்து வனாந்தரத்திற்கு போகும் வழியே ஓடிப் போனார்கள் யோசு 8:15

யுத்தத்தில் முன்னே கால்வைக்கத் தெரிந்து கொண்ட நாம் சில வேளையில் கால்களை பின் வைக்கவும் தெரிந்து கொள்ள வேண்டும். சத்துருவை அவன் கூட்டிலிருந்து வெளியே வரவழைப்பது மிகப் பெரிய தந்திரம், இதை யோசுவா சரியாக செய்தார், ஆயியின் மனுஷர் எல்லாருமே பட்டணத்தை விட்டு யோசுவாவை துரத்திக் கொண்டே வெளியே வந்து விட்டார்கள். பதிவிருந்தவர்கள் பட்டணத்தைப் பிடித்து விட்டார்கள்.

யோசுவா வனாந்தர மார்க்கமாய் ஓடினது கோழைத்தனம் அல்ல புத்திசாலித்தனம் என்பதை மறந்து விடக் கூடாது. இந்தக் காட்சியை இன்றைய வசதியுடன் வீடியோ யாராவது எடுத்தால் எப்படி இருக்கும். யோசித்துப் பாருங்கள்.

ஆஹா! இதோ பாருங்கள் பாஸ்டர் யோசுவா பின்னிட்டுப் போகிறார் என்று ஊர் முழுக்க படக்காட்சி ஊழியம் நடத்தி விடுவார்கள். இன்று இப்படித்தான் ஊழியம் நடந்து கொண்டிருக்கிறது. கிறிஸ்துவை உயர்த்துவதை விட

ஊழியக்காரர்களின் செயல்களை விமர்சிப்பதே சிலருக்கு விளையாட்டாக போய்விட்டது.

நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கலாம். எனினும் இதை கொஞ்சம் மனதின் ஓரத்தில் நிறுத்தி வையுங்கள். ஊழியக்காரன் (யோசுவா) பின்னால் போகிறான் என்றால் பின்மாற்றக் காரன் என்று எண்ணாதே. அவனுக்குள் மிகப் பெரிய தேவ திட்டம் இருக்கிறது என்பதை நினைவில் வை.

ஊழியக்காரன் விட்டுக் கொடுத்துப் போவதினுல் அவன் ஏமாந்தவன் என்று துரத்த நினைக்காதே, உன் ஸ்தானத்தை அவனின் ஆட்கள் பிடித்துக் கொள்வார்கள். உன் நிலமை பரிதாபமாக மாறும், ஒரு நாள் வரும் உனக்கு முன்னாலேயும் பின்னாலேயும் ஒன்று சேர பட்டயம் வரும் மறந்து விடக் கூடாது.

மீண்டும் தொடருக்கு வருவோம் சத்துரு தன் இடத்தை விட்டு வருவது வரை காத்திருத்தல் என்பது முக்கியம். பதிவிருந்தவர்கள் நேரம் வரும் வரை காத்திருந்தார்கள். யோசுவாவிடம் இருந்து சைகை வந்தவுடன் புறப்பட்டார்கள், – வெட்டினுர்கள், பட்டணத்தைப் பிடித்தார்கள்.

காத்திருத்தல் என்பது முக்கியம். தேவ சமூகத்தில் நமக்கு சரியான பதில் அல்லது அனுமதி கிடைக்கும் வரை காத்திருத்தல் அவசியம், யோசுவா முதல் அதிகாரம் முதல், கடைசி அதிகாரம் வரை பல்வேறு யுத்தக் கலையை யோசுவா கடைபிடித்துள்ளார். அதில் மூன்றை மட்டும் இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

ஜெபத்தால் அமலேக்கியனை முறியடித்து,

துதியால் எரிகோவை தகர்த்து,

காத்திருப்பதால் ஆயியை பிடித்து,

வெற்றிகண்ட யோசுவாவைப் போல் ஜெயம் பெறுவோம்.



# 3

# வளமான வாலிபம்

யோசுவாவின் வாலிப வயது நம்மை அதிசயிக்க வைக்கிறது. எகிப்தில் அடிமைத்தனத்தில் இருந்த நாட் களிலிலேயே தனித்தன்மையுடன் யோசுவா நடந்து இருப்பார் என்று தோன்றுகிறது.

அதனுல்தான் மோசே இனங்கண்டு பிடித்து அழைக்க முடிந்தது. மோசேயின் மிகப் பெரிய சுமையை யோசுவா பகிர்ந்து கொண்டது மாத்திரமல்ல பின்னுளின் மோசேயின் பொறுப்புகளையும் சுமந்து தேவ சித்தத்தை நிறைவேற்றினுன் என்பது குறிப்பிடத்தக்கது.

எத்தனையோ வாலிபர்கள் அந்நாள்களில் இருந்திருப்பார்கள். அத்திரள் கூட்டத்தின் மத்தியிலும் யோசுவா மோசேயின் கண்களுக்கு அகப்பட்டதற்கு காரணம் தேவனின் முன் குறிப்பு என்றாலும், யோசுவாவின் ஜீவியத்தில் வெளிப்பட்ட வெளிச்சமும் ஒரு காரணம் என்பதை மறந்து விடக் கூடாது.

**1.யோசுவாவின் ஒப்புக் கொடுத்தல்** :- ரெவிதீமிலே அமலேக்கியர் இஸ்ரவேலருக்கு எதிராக யுத்தத்திற்கு வந்தார்கள். மிக இக்கட்டான சூழ்நிலை. இதுவரை எகிப்தை விட்டபின் யுத்தத்தை இவர்கள் கண்டதில்லை. இந்த முதல்

முயற்சியில் தான் யுத்தம் செய்யும்படி யோசுவாவிற்கு மோசே அழைப்பு கொடுக்கிறார்.

சூழ்நிலையை சற்று யோசித்துப் பாருங்கள். இது வரை இஸ்ரவேலர் யுத்தத்தை சந்திக்காதது மாத்திரமல்ல தங்களுக்கு எதிராக வரும் பாதக சூழ்நிலைகளை பொறுத்துக் கொள்ளும் மனம் இல்லாத மக்கள் இவர்கள்.

செங்கடலைக் கண்டபோது முறுமுறுத்தவர்கள், மாராவில் முறுமுறுத்தவர்கள், தண்ணீர் இல்லாததினால் ரெவிதீமில் முறுமுறுத்தவர்கள், இப்படிப்பட்ட ஜனத்தாரின் மத்தியில் அமலேக்கியரின் முற்றுகையை தகர்ப்பதற்கு மோசே நேரடியாக யுத்தக்களத்திற்கு போவதை தவிர்த்து விட்டு யோசுவாவை அனுப்புகிறதை சிந்தித்து பாருங்கள்.

ஒரு வேளை யோசுவாவின் ஸ்தானத்தில் நான் இருந்திருந்தால் நிச்சயமாக போயிருக்க மாட்டேன், ஐயா மோசே அவர்களே, செங்கடல் மேல் கோலை நீட்ட வேண்டுமா? மாராவின் தண்ணீரில்மரத்தை வெட்டிப் போட வேண்டுமா? கன்மலையை கோலினுல் அடிக்க வேண்டுமா? அப்படிப்பட்ட வேலைகளை எனக்குத் தாருங்கள் மிக்க மகிழ்ச்சியடைவேன்.

ஆனுல் அப்படிப்பட்ட பெருமை வாய்ந்தவைகளை நீங்கள் எடுத்துக் கொண்டு அமலேக்கோடு யுத்தத்திற்கு என்னைஅனுப்புகிறீர்களே இது என்ன வேலை நான் போக முடியாது என்று சலித்துக் கொண்டிருப்பேன்.

அல்லேலூயா! வேலை எதுவானுலும், உடனே கீழ்ப்படிந்த யோசுவாவிற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறன்.

வாலிப சகோதரனே! வாலிப சகோதரியே! – வாலிப ஊழியர்களே! உங்களுக்காகவும் கர்த்தரை துதிக்கிறேன்.





யோசுவாவிற்குள் இருந்த ஒப்புக் கொடுக்கும் ஆவி உங்களுக்குள் பெருகுவதாக.

எடுத்த எடுப்பிலேயே யோசுவா இஸ்ரவேலுக்கு தலைவனுகவோ, அற்புதங்களை செய்யும் ஊழியக்காரனு கவோ நியமிக்கப் படவில்லை, மாறாக யுத்ததிற்கு போகும் ஒரு படைக்கு தலைமைப் பொறுப்பை ஏற்கும் படிக்கே மோசேயினால் பணிக்கப்பட்டான்.

உங்கள் தலைவர், அல்லது உங்கள் போதகர் உங்களுக்கு எந்த பொறுப்பை கொடுக்கிறாரோ அதை மகிழ்வுடன் செய்ய உங்களை ஒப்புக் கொடுங்கள், அதனுல் உங்கள் மூலம் மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்படுவதுடன், நீங்களும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

யுத்தக் களத்திற்கு யோசுவா, மலையின் உச்சிக்கு ஆரோனும் ஊரும், இந்த அமைப்பை ஆராய்ந்து பார்த்தால் உங்கள் மனம் வியாகுலப்படும்.

ஆரோன், மோசேயின் அண்ணன், ஊர் மோசேயின் அக்காவின் கணவன், ஆக உறவினர்கள் எல்லாம் உயரம் செல்ல வேண்டும். நான் களத்தில் கஷ்டப்படவேண்டும். என யோசுவா லேசாக முறுமுறுத்திருந்தால் கூட அமலேக்கியரிடம் இஸ்ரவேலர் தோற்றுப் போய் இருந்திருப்பர்.

அன்பானவர்களே! மற்றவர்களுக்கு அளிக்கப்படும் பொறுப்பு மற்றும் அங்கீகாரத்தை குறித்து கவலைப்பட வேண்டியதோ, கவனத்தை செலுத்த வேண்டியதோ, உங்கள் வேலையல்ல உங்களுக்கு கொடுக்கப்படும் பொறுப்பு எதுவோ அதை செவ்வனே செய்வதே உங்களின் கடமை.

மோசே ஏனோ தானோ என்ற ரீதியில் யோசுவாவை அனுப்பவில்லை தேவ ஞானம் பெற்ற மோசே இந்தச்

செயலைச் செய்ய இவனே பொருத்தம், என்று தெளிவாக தேவ சித்தத்தை அறிந்திருந்தபடியால் ஆரோன் ஊரை களத்திற்கு அனுப்பாமல் யோசுவாவை அனுப்பினார்.

உங்களுக்கும்அப்படித்தான், உங்கள் மேல் பொறுப்பில் உள்ளவர்கள். இந்த வேலைக்கு நீங்கள் பொருத்தம் இந்த இடத்திற்கு நீங்கள்தான் பொருத்தம் என்று உங்களை ஏற்படுத்துகிறார்கள். ஒரு வேளை உங்கள் அனுபவத்திற்கும், அறிவிற்கும், ஆற்றலுக்கும் அது குறைந்த காரியமாக தோன்றலாம் அல்லது உங்களைவிட மற்றவர்கள் உயர் பொறுப்புகளுக்கு ஏற்படுத்தப்படலாம், அதற்காக நீங்கள் சோரவும் கூடாது, மாறவும் கூடாது.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட முதற்கட்ட பொறுப்பை நீங்கள் சரியாகவும் சிறப்பாகவும் செய்து விட்டால் தேவன் உங்களை படிப்படியாக சரியான இடத்திற்கு உயர்த்துவார், அப்பொழுது உங்கள் உயர்வை ஒருவராலும் எட்டிப் பிடிக்க முடியாது, மறந்து விடாதீர்கள்.

ஆரம்ப கால ஒப்புக் கொடுத்தலால் ஒப்பற்ற தலைமைத் துவத்தை யோசுவா பெற்றுக் கொண்டதை கவனித்து உங்கள் வாலிபவயதில் மேலான அதிகாரங்களுக்கு ஒப்புக் கொடுத்துப் பாருங்கள், புதிய கிருபையும் ஆசீர்வாதமும் உங்களைத் தொடர்வதை உணர்வீர்கள்.

யோசுவாவின் ஒப்புக் கொடுத்தலை சிந்தித்துப் பார்த்தபோது மிகவும் தாழ்மையுள்ள வாலிபன் என்கிற சித்திரம் எனக்குள் மின்னி மின்னி மறைகிறது.

யாத்திராகமத்தில் அமலேக் கோடு யுத்தம் செய்த சேனைத் தலைவனுகிய யோசுவா எண்ணாகமத்தில் மிகச் சாதாரண பொறுப்பிற்கு தள்ளப்பட்டதை கவனித்துப்





பாருங்கள். கானுன் தேசத்தை உளவு பார்க்கும்படி மோசே இஸ்ரவேலரின் பனிரெண்டு கோத்திரத்திலிருந்து ஆட்களை அனுப்புகிற போது பன்னிருவரில் ஒருவனாக யோசுவா அனுப்பப் பட்டான்.

முன்னே அவன் தளபதி, இப்போதோ உளவாளி, இந்த மாற்றத்தைக் குறித்து அவன் கிஞ்சிற்றும் கவலைப் படவில்லை, மாறாக தனது தலைவன் கொடுத்த பொறுப்பை கர்த்தரின் நாமத்தின் மகிமைக் கென்றும், சபையாரின் நன்மைக் கென்றும் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டான். சரியாகச் செய்தான்.

இப்படித்தான் நமக்கும், சபையில் – ஸ்தாபனத்தில் முந்தைய ஆண்டைவிட பொறுப்புகள் தலைவரால் போதகரால் மாற்றிக் கொடுக்கப் படலாம். இதை இன்முகத்துடன் ஏற்று செய்பவனே காரிய சித்தி உள்ளவன், கர்த்தர் அவன் மேல் பிரியமாய் இருப்பார் அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் அவன் கிரீடம் பூக்கும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

யோசுவா மாத்திரமல்ல வேதத்தில் உள்ள மற்ற பரிசுத்தவான்களின் வாழ்க்கையும் அப்படித்தான். தாவீது ராஜ அபிஷேகம் பெற்றவுடன் ராஜாவாக பொறுப்பேற்கவில்லை. அங்கீகரிக்கப்படவுமில்லை. மாறாக முதற்கட்டமாக இசைக் கலைஞன், அடுத்து போர்த்தளபதி, அடுத்து இஸ்ரவேலின் ஒரு பகுதிக்கு ராஜா, அதற்குப்பின் தான் சமஸ்த இஸ்ரவேலருக்கும் ராஜாவானுன்.

தமிழகத்தில் குறிப்பிடத்தக்க சுவிசேஷகரை அறிவேன். நான் நேசிக்கும் பலரில் அவரும் ஒருவர், இன்று கர்த்தர் அவரை ஆசீர்வதித்து வருகிறார், அவருக்கென குடும்பம்,

ஊழியம், அலுவலகம், உதவி ஊழியர்கள் என்று எல்லாம் இன்று உண்டு. அவரைக் கர்த்தர் வரங்களால் நிறைத்து பல இடங்களில் பயன்படுத்தி வருகிறார்.

ஆனால் அவரது ஆரம்ப காலத்தை கவனித்துப் பார்த்தால், மிகவும் ஆச்சரியமாய் இருக்கும். தனது ஆரம்ப காலத்தில் தமிழகத்தில் உள்ள ஒரு பெரிய சுவிசேஷகரிடம் உதவியாளராக இருந்தார். அப்படியானால் உதவிப் போதகர் என்று எண்ணிவிடாதீர்கள், அந்த ஊழியர் பேசும் கூட்டங்களை வீடியோ படம் எடுப்பவராகவே அவர் பணியாற்றினார்.

அவருக்கு அளிக்கப்பட்ட அந்த பொறுப்பை அவர் உண்மையாகவும் பொறுப்பாகவும் நேர்த்தியாகவும் செய்தார். அந்த ஒப்புக் கொடுத்தலை கர்த்தர் கவனித்தார். ஒரு நாள் வந்தது, அந்த அருமையான சகோதரனைக் கர்த்தர் கரத்தில் எடுத்தார். இன்று அவரை உயர்த்தி பயன்படுத்தி வருகிறார்.

அருமையானவர்களே! உங்களுக்கு அளிக்கப்பட்ட பொறுப்பு உங்களுக்கு பிடிக்காமல் கூட இருக்கலாம். ஆனாலும் செய்யுங்கள். உங்கள் வாலிபம் வளமாக இருக்க சிறியதோ, பெரியதோ எதுவானாலும் கொடுக்கப்படும் பொறுப்பை மகிழ்வுடன் ஏற்று சரியாய் செய்ய ஒப்புக் கொடுங்கள் உயர்த்தப்படுவீர்கள்.

**2. யோசுவாவின் வாஞ்சை** :- யாத் 33:11 ல் நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் வாலிபன் ஆசரிப்புக் கூடாரத்தை விட்டு பிரியாதிருந்தான் அன்று எழுதப்பட்டுள்ளதை கண்டு நெகிழ்ந்து போனேன்.





இஸ்ரவேலின் ஜனத்தின் மத்தியில் மோசேக்கு அடுத்து தலைவனாகும்படி யோசுவா உயர்த்தப்பட்டதற்கு இரகசியமே இதுதான், அவன் என்னிடத்தில் வாஞ்சையாய் இருக்கிற படியால் அவனை உயர்ந்த அடைக்கலத்தில் வைப்பேன் என்ற வசனத்திற்கு யோசுவாவின் வாழ்க்கை நூறு சதம் சாட்சியாய் இருக்கிறது.

ஆசரிப்புக் கூடாரத்தில் பிரவேசிப்பதற்கும் காவல் காப்பதற்கும் விசேஷித்த உரிமை லேவி கோத்திரத்திற்கு வழங்கப்பட்டு இருந்தது. ஆனாலும் எப்பிராயிம் கோத்திரத்து யோசுவா ஆசரிப்பு கூடாரத்தின் வாசலிலேயே அமர்ந்து இருந்தது எவ்வளவு சிறப்பு என்பதை எண்ணிப் பாருங்கள்.

யோசுவாவின் வாழ்க்கையின் பல அனுபவங்கள் தாவீதின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை வேதத்தை வாசித்துப் பார்க்கும்போது நான் உணர்கிறேன். அந்நிய தேசத்தில் தேவனுக்குப் பயந்து தீமையை விட்டு விலகின யோசேப்பின் வாழ்வு பிற்காலத்தில் தானியேல் மற்றும் அவரது நண்பர்களுக்கு நற்போதனையாக அமைந்திருக்கும் என்று முன்னே நான் எழுதிய தானியேல் புத்தகத்தில் குறிப்பிட்டு இருந்தேன்.

அதற்கொப்பான ஒரு தாக்கம் யோசுவாவின் வாழ்க்கை மூலம் தாவீதுக்கு ஏற்பட்டிருக்குமென நம்புகிறேன்.

தானே சென்று யுத்தம் செய்து அமலேக்கியரை வென்றது ஒரு காலம் ஆனால் அதே வேளையில் எரிகோவை தகர்ப்பதற்கு யுத்த முறைகளை ஒதுக்கி வைத்து விட்டு கர்த்தரை சார்ந்து வெற்றி பெற்றது ஒரு காலம்.

உயரமான கோலியாத் இஸ்ரவேலின் சேனையை திகைத்து வந்தபோது சவுல் உட்பட இஸ்ரவேலின் சேனையே

திகைத்து நின்றனர், அதே நேரத்தில் சிங்கத்தையும் கரடியையும் நேரே சென்று கிழித்தெரிந்த தாவீது தன் பலத்தையும் பயன்படுத்தாமல் யுத்த முறைகளையும் கைக் கொள்ளாமல் முழுக்க முழுக்க யோசுவாவைப் போலவே கர்த்தரைச் சார்ந்து யுத்தத்தில் வெற்றி பெற்றான்.

யோசுவா ஆசரிப்புக் கூடாரத்தை விட்டு விலகாமல் உள்ளத்தில் தாகம் கொண்டு இருந்தது போலவே தாவீதும். ஆயிரம் நாளைப் பார்க்கிலும் உமது ஆலயப் பிராகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது என்றும், அவரது ஆலயத்தின் வாசல்படியில் உட்காருவதையே பெரிதும் விரும்புகிறேன் என்று அறிக்கையிட்டான்.

சங் 27:4 ஐ வாசித்துப் பாருங்கள், கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன் அதையே நாடுவேன், நான்கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும் படியாகவும் அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும் படியாகவும் நான் என் ஜீவன் உள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்குவதையே நாடுவேன்.

தேவாலயத்தின் மேல் எத்தனை தாகம் என்று யோசித்துப் பாருங்கள், ஆசரிப்புக் கூடாரத்தை விட்டு பிரியாத யோசுவா மிக சாதாரண நிலையில் இருந்து உயர்த்தப்பட்டது போலவே தேவாலயத்தின் மேல் வாஞ்சையாய் இருந்த தாவீது ஆட்டு மேய்ப்பன் என்ற நிலையில் இருந்து நாட்டுக்கு அரசன் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டான் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஞாயிறு தோறும் ஆலயத்திற்கு வருவது முக்கிய மல்ல நாள்தோறும் கர்த்தரின் ஆலயத்திற்கடுத்தவைகளைக் குறித்த கரிசனம் கொள்வதே முக்கியம்.





உங்களுக்கு வேலையில்லையா? உயர்வு இல்லையா? அதற்காக நீங்கள் எந்த மனிதனையும் நாடித் தேடி ஓட வேண்டியது அவசியமில்லை. உங்கள் ஆலயத்திற்கு நாள்தோறும் செல்லுங்கள் ஜெபிப்பது மாத்திரமல்ல ஆலயத்தில் செய்ய வேண்டிய காரியங்களை சரீரப் பிரகாரமாக செய்து பாருங்கள், நீங்கள் எண்ணினதை விட நல்ல வேலை உங்களுக்கு கிடைக்கும்.

இன்று கர்த்தர் என்னை அதிகமாக ஆசீர்வதித்து வருகிறார். நல்ல குடும்பம், நல்ல சபை தந்துள்ளார். உலகத்தில் பல பகுதிகளில் எனது புத்தகங்கள் அநேகரால் விரும்பி வாசிக்கப்படுகிறது. ஆனால் எனது ஆரம்பம் எப்படி இருந்தது என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

நான் இரட்சிக்கப்பட்டு அபிஷேகம் பண்ணப்பட்ட நாட் களில் அரசு நிறுவனம் ஒன்றில் தொழிற் பயிற்சி பயின்று கொண்டிருந்தேன். அந்நாட்களில் தேவனுடைய வீட்டின் மேல் மிகப்பெரிய தாகம் – வாஞ்சை என் உள்ளத்தில் ஊற்றாக பெருக்கெடுத்தது.

காலையில் எழுந்தவுடன் ஜெபவீட்டிற்கு சென்று விட் டுத்தான் எனது தொழிற்பயிற்சி நிலையம் செல்வேன். மாலை வீடு திரும்பியதும் ஜெப வீட்டிலேயே தங்கி கர்த்தரை சேவித்தேன்.

அந்த நாட்களில் நான் எந்த வேலையும் சொல்லி செய்வததில்லை. மாறாக நானே கர்த்தரின் வீடு எப்படி இருக்க வேண்டும் என்பதை யோசித்து யோசித்து ஆசையாய் செய்வேன். ஜெபவீட்டின் ஒட்டடைகள் அகற்றி, சுத்தம் செய்து விரிப்புகளை விரித்து ஒலி, ஒளி அமைப்பு

களை பராமரித்து தண்ணீர் இறைத்து கர்த்தரின் ஆலயத்தில் மகிழ்ச்சியாய் செய்தேன். அதனிமித்தம் என் உள்ளம் பேருவகை கொண்டது.

அந்நாட்களில் கர்த்தர் என்னை முழு நேரப் பணிக்கு திட்டமாய் அழைத்தார். என்னைப் போலவே சிலர் தாங்கள் அழைக்கப்பட்டதைக் குறித்து எங்கள் போதகரிடம் சொன்னார்கள், கொஞ்ச காலம் காத்திருந்து அழைப்பை உறுதி செய்து கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு மறுமொழி கூறிய எங்கள் போதகர் "உனக்கு கர்த்தரின் அழைப்பு திட்டமாய் உண்டு என்று எனக்குத் தெரியும்" என்றார்.

அவரது கூற்று எனக்கு பெரிய ஆச்சரியத்தை உண்டாக்கியது. பாஸ்டர்! எதை வைத்து இப்படி சொல்கிறீர்கள் என்று கேட்டேன், நீ தேவாலயத்தின் காரியங்களைக் குறித்து உள்ளத்தில் உணர்வடைந்து உற்சாகமாய் உண்மையாய் செய்யத் துவங்கிய போதே தேவனுடைய கரம் உன் மேல் இருப்பதை உணர்ந்து கொண்டேன், என்று அவர் பதில் சொன்னபோது என்னுள்ளம் எல்லையில்லா மகிழ் கொண்டது.

தேவாலயத்தின் மேல்தாகம் உள்ள எந்த மனிதனும் பிற்காலத்தில் மிகப்பெரிய தலைவனுக, போதகனுக, ஊழியனுக வருவான் என்பது வேதத்திலும், பரிசுத்தவான்களின் அனுபவத்திலும் உறுதியாக்கப்பட்ட உண்மை.

தம்பி தங்கையரே! உங்களிடம் சில வார்த்தைகளை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நீங்கள் என்றாகிலும் உங்கள் தேவாலயத்தை சுத்தம் செய்தது உண்டா? ஒரு





குடம் தண்ணீர் இறைத்து வைத்தது உண்டா? பாய், நாற்காலி போன்றவற்றை விரித்து ஆலயத்தை ஆயத்தம் செய்தது உண்டா? குறைந்த பட்சம் ஆராதனை முடிந்த பிறகாவது ஆலயத்தின் காரியங்களை சரி செய்தது உண்டா? ஆம் என்றால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் இல்லை யென்றால் உங்களைக் குறித்து தேவன் கவலைப் படுகிறார் என்பதை நினைவில் வையுங்கள்.

பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகள் ஆலயத்திற்கு அடுத்த காரியங்களைச் செய்ய பழக்குவிய்யுங்கள், ஊக் குவியுங்கள் அது அவர்களுக்கு நல்லது. ஒரு வேளை நீங்கள் செல்லும் ஆலயத்தில் இவ்வேலைகளை செய்ய சம்பளத்திற்கு ஆட்கள் நியமிக்கப்பட்டிருக்கலாம், அவர்கள் செய்ய தவறிய வேலைகளை உங்கள் பிள்ளைகள் செய்ய கற்றுக் கொடுங்கள் பிற்காலத்தில் அவர்கள் மிகப்பெரிய தலைவர்களாக வருவார்கள்.

**3. மோசேயின் ஊழியக்காரன்**:- யாத் 33:13 ஐ மீண்டும் வாசித்துப் பாருங்கள் நூனின் குமாரனுகிய யோசுவா என்னும் அவனுடைய பணிவிடைக் காரனாகிய வாலிபன் ஆசரிப்புக் கூடாரத்தை விட்டு பிரியாதிருந்தான்.

யோசுவா யுத்தவீரன் என்ற பெயரில் அல்ல மோசேயின் பணிவிடைக்காரனுகிய வாலிபன் என்ற பெயரில் வேதத்தில் அழைக்கப்பட்டுள்ளதை எண்ணிப்பாருங்கள். ஊழியத்தில் உயர்வு அடைய மிகப் பெரிய இரகசியமே இவ்விடத்தில் ஆரம்பிக்கிறது.

தலைமைத்துவம் தானுய் வருவது அல்ல, சரியான பயிற்சியின் மூலமே அது கிட்டுகிறது. சிலர் தலைவர்களாக நியமிக்கப் படுகிறார்கள். ஆனுல் அதிவிரைவில் தலையை இழந்து விடுகிறார்கள்.

ஆனால் யோசுவாவின் தலைமைத்துவம் அப்படிப் பட்டதல்ல. மோசேயோடு கர்த்தர் இருந்தது போலவே யோசுவாவோடும் இருந்தார். ஜனங்கள் மோசேக்கு கீழ்ப்படிந்தது போலவே யோசுவாவிற்கு கீழ்ப்படிந்தார்கள் என்ற வசனங்கள் யோசுவாவின் உயரிய தலைமைத்துவத்திற்கு சாட்சிகளாய் உள்ளன.

ஒரு தலைவனுக்கு கீழ்படிந்து, கற்றுக் கொள்பவனே பின்னால் சிறந்த தலைவனாக முடியும், என்பது வேதத்திலும், சமுதாயத்திலும் உறுதியாக்கப்பட்ட உண்மை.

மோசேயின் ஒவ்வொரு அசைவுகளையும் யோசுவா உடன் இருந்து கவனித்திருந்த படியால்தான் பின்னாளில் மோசேயைவிட யோசுவாவினால் சிறப்பாக செயலாற்ற முடிந்தது. யோசுவாவின் புத்தகத்தை நீங்கள் நிதானமாக வாசித்துப் பார்த்தால் பிரச்சினைகள் பெரிதாக மாறுமுன்பே யோசுவா அவைகளை மிகச் சரியாக கையாண்டு வெற்றி பெற்றதை உங்களால் அறிந்து கொள்ள முடியும்.

அறிஞர் அண்ணாவிற்குப் பின் கலைஞர் கருணாநிதி பொறுப் பேற்றுக் கொண்டு கட்சியையும் ஆட்சியையும் தொடர்ந்து திறம்பட நடத்தினார்.

அவ்வேளையில் ஒருவர், மிகச் சாதாரண படிப்பறிவு உள்ள நீங்கள் அறிஞர் அண்ணாவைவிட சிறப்பாக செயலாற்றுகிறீர்களே அதின் இரகசியம் என்ன வென்று கேட்டார். உடனே கலைஞர் கருணாநிதி அண்ணா, M.A., படித்திருக்கிறார். நான் அண்ணாவையே படித்திருக்கிறேன் என்று பளிச் சென்று கூறினார்.

இந்த பதிலின் ஆழத்தைப் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். யோசுவா மோசேயை படித்திருந்தபடியால்





தான் மோசேயைவிட சில வேளைகளில் சாதுரியமாக செயல்பட்டார். மோசேயை படிக்க முடியுமா? முடியும் எப்போது தெரியுமா? அவரோடு இரவும் பகலும் சேர்ந்து இருக்கும் போது மாத்திரமே.

யோசுவாவிற்கு திறமைகள் இருந்தது, ஆனால் தனது தலைமைத்துவத்திற்கு சரியான அஸ்திபாரம் உண்டாகும் படி மோசேக்கு பணிவிடைக் காரனாக இருந்தார் என்பது முக்கியம்.

பணிவிடைக்காரன் என்றால் ஏதோ உதவியாளன் என்று எண்ணிவிடக் கூடாது. வேலைக்காரன் பணியை யோசுவா மேற்கொண்டார். மோசேயின் சகல காரியங்களையும் பொறுமையாக, பிரியமாக யோசுவா செய்தபடியால் தான் பின்னாளில் மோசேயின் மேல் இருந்த அபிஷேகம் யோசுவாவின் மேல் இறங்கியது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இதற்கொப்பான மேலும் பல அனுபங்கள் வேதத்தில் காண முடியும்.

எலியாவின் கைகளுக்கு தண்ணீர் வார்த்த எலிசா பின்னாளில் எலியாவின் ஸ்தானத்தில் தீர்க்கதரிசியாக அபிஷேகம் செய்து வைக்கப்பட்டார்.

சவுலின் படைத்தளபதியாக, செயல்புரிந்த தாவீது சவுலுக்குப் பிறகு இராஜாவாக நியமிக்கப்பட்டார்.

ஏலியின் பணிவிடைக் காரனாக இருந்த சாமுவேல் ஏலிக்கு அடுத்து நியாயாதிபதியாக வந்தான்.

யோசுவா, எலிசா, தாவீது, சாமுவேல், ஆகியோரின் வாழ்வில் உள்ள அடிப்படை ஒற்றுமை என்ன தெரியுமா?

அவர்களின் தலைவர்களின் ஸ்தானத்தை பின்னுளில் இவர்கள் பெற்றுக் கொண்டது முதல் சிறப்பு, அடுத்து அவர்களின் தலைவர்களைவிட அதிகமாக இவர்கள் பிரசாசித்தது அதைவிட சிறப்பு.

எனவே எனக்குப் பிரியமானவர்களே! ஆவிக்குரிய தலைவனுக்கு, ஆவிக்குரிய தகப்பனுக்கு, ஆவிக்குரிய ஊழிக்காரர்களுக்கு மன மகிழ்ச்சியோடே ஊழியம் செய்யுங்கள்.

மாற்குவை குறித்து பவுல் குறிப்பிடுகிறபோது ஊழியத்தில் அவன் எனக்கு அதிக பிரயோஜனமுள்ளவன் என்று எழுதியிருக்கிறதை கவனியுங்கள். பரிசுத்தவான்களுக்கு செய்யும் பணிவிடைகளின் பேரில் கர்த்தர் பிரியமாய் இருக்கிறார்.

எனது வாலிப நாட்களை நினைத்துப் பார்க்கிறேன். எனது போதகர் உட்பட பல ஆவிக்குரிய தலைவர்களுக்கு பணிவிடை செய்திருக்கிறேன். அதினிமித்தம் பல ஊழிய இரகசியங்களை அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டதுமன்றி அவர்கள் என்னை மனப்பூர்வமாக ஆசீர்வதித்த பாக்கியத்தையும் பெற்றுக் கொண்டேன். அவைகளை எண்ணிப் பார்க்கும் போது பெருமிதம் எனக்குள் ஏற்படுகிறது.

இந்த புத்தகத்தை நான் எழுதிக் கொண்டிருந்த நாட்களில் ஏற்பட்ட ஒரு சுவையான சம்பவம். எனக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டு ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்த வாலிபர்கள் உட்பட சில தாய்மார்களும் ஒர் காரியத்தை அலசிக் கொண்டு இருந்தார்கள்.

அவர்கள் அலசிய தலைப்பே மிக ஆபத்தானதுதான், ஊழியக்காரர்களுக்கு என்னென்ன பணிவிடை செய்யலாம்,





செய்யக்கூடாது? இதுதான் அவர்களின் வாதம். எல்லாவற்றிற்கும் ஒரு எல்லை உண்டு, இது ஒருவர், சரீரப் பிரகாரமான வேலை செய்யத் தேவையில்லை இது மற்றுமொருவர். என்னதான் இருந்தாலும் ஸ்திரீகள் பணிவிடை செய்யக் கூடாது. இது ஒரு அம்மையார். விவாதம் சூடு பிடித்தது. கடைசியாக பஞ்சாயத்து என்னிடத்தில் வந்தது.

ஒரு வாலிபத் தம்பி "பாஸ்டர்" பரிசுத்தவான்களுக்கு என்னென்ன பணிவிடை செய்யலாம், செய்யக் கூடாது, வேதம் என்ன சொல்கிறது. என்றார், நான் ஒரே வரியில் என் கட்டை பஞ்சாயத்தை முடித்து விட்டேன்.

என் தீர்ப்பு என்ன தெரியுமா? **இந்த சிறியரில் ஒருவனுக்கு எதை செய்கிறீர்களோ அதை எனக்கே செய்கிறீர்கள்.** அத்துடன் எல்லோரும் அமைதியாகி விட்டார்கள்.

இப்படிப்பட்ட வாதங்கள் நமக்குத் தேவையில்லை. சுத்த மனசாட்சியுடன், கிறிஸ்துவின் அன்பினிமித்தம் மனப்பூர்வமான பணிவிடையில் கர்த்தர் மகிழ்கிறார். அதற்கு எல்லைக் கோடு போட யாருக்கும் அதிகாரம் கிடையாது.

யோசுவா மோசே உயிருடன் இருந்த நாள்வரைக்கும் மோசேயின் ஊழியக்காரனுய் இருந்தார்.

ஊழிய முறைகளை கற்றுக் கொண்டது மாத்திரமல்ல, ஊழியத்திற்குண்டான கிருபையையும் யோசுவா பெற்றுக் கொண்டார். இதுவரை மோசேயின் ஊழியக் காரனுக இருந்த யோசுவா மோசேயின் மரணத்திற்குப் பிறகு கர்த்தருடைய ஊழியக் காரனுகிய யோசுவா என்று அழைக்கப்பட்டதை சிந்தித்துப் பார்த்தால் சிந்தை தெளிவடையும்.

இளம் ஊழியர்களுக்கு சில ஆலோசனைகளை இங்கு சொல்ல விரும்புகிறேன். கர்த்தர் உங்களுக்கு எந்த ஆவிக்குரிய தலைவரைக்கொடுத்துள்ளாரோ அவருக்கு நீங்கள் உண்மையாக இருக்க வேண்டும்.

உங்கள், தலைவனை ஊழியத்தில் இருந்து தகர்க்க நினைக்கும் சில குழி நரிகள், முதல் வலையை உங்கள் முன்பாகத்தான் விரிப்பார்கள். உங்கள் ஐயா எப்படி, இப்ப ரொம்ப மாறிவிட்டார் என்று முதல்வரியை துவக்கி விடுவார்கள். நீங்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் மதிமயங்கி உங்கள் தலைவரைக் குறித்த காரியத்தை கொட்டி விடக் கூடாது.

யோசுவாவிற்கு தனது தலைவன் மேல் அபாரமான வைராக்கியம் இருந்தது குறிப்பிடத்தக்கது.

கர்த்தரின் ஆலோசனையின்படி மோசே எழுபது பேர்களை தெரிந்து கொண்டார். அவர்கள் மேல் மோசேயின் மேலிருந்த ஆவியை கர்த்தர் வைத்தார். அதனுல் அவர்கள் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.

இதில் விசேஷம் என்னவெனில் அந்த எழுபது பேரில் எல்நாத், மேதாத்என்ற இருவர் பாளயத்தில் இருந்து விட்ட போதிலும் அவர்களும் தீர்க்க தரிசனம் உரைத்தார்கள். இந்த செய்தி ஒரு பிள்ளையாண்டான் மூலம் மோசேக்கு வந்தது. இந்த சேதி கேட்ட யோசுவா என்ன செய்தான் தெரியுமா?

உடனே மோசேயினிடத்தில் உள்ள வாலிபர்களில் ஒருவனும் அவனுடைய ஊழியகாரர்களில் ஒருவனுமாகிய யோசுவா பிரதியுத்தரமாக என் ஆண்டவனுகிய மோசேயே அவர்களை தடை பண்ணும் என்றான். எண் 11:28.





இப்படி யோசுவா சொன்னவுடனே மோசே, நீ எனக்காக வைராக்கியம் காண்பிக்கிறோயோ? என்றார், இந்த செயலைக் குறித்து யோசுவாவை மோசே கடிந்து கொண்டாலும் தனது தலைவன்மேல் யோசுவாவிற்கு இருந்த வைராக்கியத்தைப் பாருங்கள்.

உங்கள் தலைவனுக்கு – போதகனுக்கு ஏற்படும் ஒவ்வொரு வேதனையையும் உங்கள் பாரமாக நீங்கள் உணராவிட்டால் எந்தக் காலத்திலும் உயர்வை அடைய மாட்டீர்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய சபையில் இப்படிப்பட்ட யோசுவாக்களை கர்த்தர் தந்துள்ளபடியால் கர்த்தரைக் துதிக்கிறேன். எனக்கு ஏதாகிலும் ஒன்று வந்துவிட்டால் தங்கள் உணவையும் உறக்கத்தையும் மறந்து பரிதபிக்கும் அவர்களை நினைக்கும் பொழுது என் உள்ளம் நெகிழ்கிறது.

எனக்கு வந்த வியாதி, விமர்சனம் இவைகளினுல் நான் வேதனைப்பட்ட வேளைகளில் என்னைத் தேற்றிக் கொண்டு தூங்கின வேளைகள் உண்டு. ஆனுல் நான் தூங்கின அதே நேரத்தில் தங்கள் தூக்கத்தை மறந்து. துறந்து ஆண்டவர் சமூகத்தில் அழுதும் தொழுதும் எனக்காய் நாட்களை அவர்கள் செலவழித்திருக்கிறார்கள்.

தனது தலைவனுக்காக வைராக்கியம் கொள்வது தனிநபர் வணக்கம் என்று சிலர் சொல்வதை என்னுல் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அஃது ஒரு பிள்ளை தன் தாயின் மேல் வைக்கும் நேச வைராக்கியத்திற்கு ஒப்பானது.

யோசுவா மோசேயை எப்படி அழைத்தார் தெரியுமா? எண் 11:28 ஐ கவனித்துப் பாருங்கள் **என் ஆண்டவனுகிய மோசேயே** எவ்வளவு கனமான வார்த்தை பார்த்தீர்களா?

தனது தலைவனை இந்த வாலிபன் ஆண்டவனே என்று வாயார அழைத்தப்படியால் தான் ஆண்டவரே இவனை இஸ்ரவேலை ஆள்பவனாக உயர்த்தினார்.

நேரில் மாத்திரமல்ல தூரத்தில் இருக்கும் போதும் தனது தலைவனை உயர்ந்த வார்த்தையால் அழைப்பவனே சரியான தேவபிள்ளை என்பதை நினைவில் கொள்ளுங்கள். கர்த்தர் உங்கள் மேல் பிரியமாய் இருப்பார்.

எனக்கு யோசுவாக்கள் உண்டு என்று முன்னே எழுதியிருந்தேன். சில விதிவிலக்குகளும் விசித்திரங்களும் கூட எனக்கு உண்டு. தேவைப்படும்போது அப்பா என்று கூப்பிடுவதும் தேவையில்லாத போது ஜிப்பா என்று கூப்பிடுவதும் இவர்களது வாடிக்கை. இவர்களை உற்றுப் பார்க்கிறேன். இந்த சவலைப் பிள்ளைகள் நாளுக்கு நாள் கவலைக்குள்ளாகி மல்லாந்து படுக்க முடியாமல் மல்லுக்கட் டிக் கொண்டு இருக்கும்.

ஆனால், உண்மையும் ஒப்புக் கொடுத்தலும், வைராக் கியமும் கொண்டிருக்கும் யோசுவாக்களை உற்றுப் பார்க்கிறேன். நாளுக்கு நாள் ஒரு சுற்று எல்லாவற்றிலும் பெருகிக் கொண்டே வருகிறார்கள்.

வாலிப தம்பி, தங்கையரே! உங்கள் வாலிபம் வளமான வாழ்வாக மாற யோசுவாவின் வாலிப வயதை சற்று தியானியுங்கள். உங்களை நிதானியுங்கள்.



# 4

# யோசிக்க மறந்த யோசுவா

திட்டமிட்டு எதையும் தீர்க்க தரிசனத்தோடு செய்து முடிக்கும் கிருபை பெற்ற யோசுவாவின் வாழ்வில் குறிப்பிடத்தக்க இரண்டு சம்பவங்கள் அவனது வாழ்க்கை வரலாற்றில் கரும் புள்ளிகளாக இருக்கின்றன.

கர்த்தரின் தாசனாகிய மோசேயின் வாழ்வில் கன்மலையைப் பார்த்து பேசுவதற்குப் பதில் கோலால் அடித்த சம்பவம் எப்படியோ, கர்த்தரின் தாசனாகிய தாவீதின் வாழ்வின் பத்சேபாள் சம்பவம் எப்படியோ, அப்படியே யோசுவாவின் வாழ்விலும் சில குளறுபடிகள் நடந்தேறிவிட் டது. ஆகிலும் தனது மாம்சத்தின் வெளிப்பாடுகளாய் அவைகளில் சிக்கிக் கொள்ளாமல் சில நிமிடம் யோசிக்காமல் போனதினால் யோசுவாவின் வாழ்வில் சில நஷ்டங்கள் வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பரிசுத்தவான்களின் வாழ்வை விளக்குகிற என் புத்தகங்களில் பரிசுத்தவான்களின் வெற்றி நன்மை ஆகியவற்றை எப்படி விவரிக்கின்றேனோ அப்படியே அவர்களின் தோல்விகளையும் பலவீனங்களையும் விவரித்து எழுதுகிறேன்.

இப்படி எழுதுவதினுல் அவர்களைக் குறித்த நல் எண்ணம் உங்கள் உள்ளத்தில் குறைந்து விடுமோ என்கிற ஐயம் எனக்கு கிடையாது. மாறாக அவைகள் வாசித்து எச்சரிப்புடன் வாழ உங்களை தயார்படுத்திக் கொள்வீர்கள் என்று நிச்சயித்திருக்கிறேன்.

யோசுவாவின் புஸ்தகத்தை வாசித்துப் பாருங்கள், ஆறாம் அதிகாரத்தில் மிகப் பெரிய வெற்றி, ஆனுல் அதை அடுத்து ஏழாம் அதிகாரத்தை வாசித்துப் பார்த்தால் மிகப் பெரிய தோல்வி.

இவைகளை இன்னும் ஆராய்ந்து பாருங்கள். எரிகோவில் பட்டயம் பிடிக்காமல் வெற்றி, ஆயியில் பட்டயத்தை பிடித்து யுத்தம் செய்தும் தோல்வி, எரிகோ, மதில் சூழப்பட்ட பெரிய பட்டணம், ஆயி சிறிய பட்டணம்.

இப்படி இருக்க எரிகோவின் வெற்றிக்கும் ஆயியின் தோல்விக்கும் என்ன காரணம் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஆறாம் அதிகாரத்தின் வெற்றிக்கு ஐந்தாம் அதிகாரத்தின் ஆயத்தம் காரணம். அதுபோலவே ஏழாம் அதிகாரத்தில் தோல்விக்கு ஆறாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள அபத்தம் காரணம்.

புரிகிறதா? ஐந்தாம் அதிகாரத்தில் விருத்த சேதனம் செய்து பரிசுத்தம் செய்யப் பட்டார்கள். எனவே ஆறாம் அதிகாரத்தில் வெற்றி.

அதே வேளையில் ஆறாம் அதிகாரத்தில், சாபத்தீடானவைகளை ஆகான் ஒளித்து வைத்தபடியால் ஏழாம் அதிகாரத்தில் தோல்வியை தழுவ வேண்டிய நிலை வந்தது.





சரி இருக்கட்டும் யோசிக்காத யோசுவா என்று தலைப்பிடப்பட்டதின் காரணத்தை உங்களுக்கு சொல்ல வேண்டும் அல்லவா?

ஆயி பட்டணத்தின் தோல்விக்கு மூன்று காரணங்கள் உண்டு, அதில் ஒன்று ஆகானின் பாவம். ஆனுல் அடுத்த காரியம் என்ன தெரியுமா? யோசுவாவின் தடுமாற்றம். உங்களுக்கு வியப்பாக இருக்கிறதா? கவனித்துப் பாருங்கள்.

ஆறாம் அதிகாரம் இரண்டாம் வசனத்தில், கர்த்தர்யோசுவாவை நோக்கி இதோ எரிகோவையும் அதின் ராஜாவையும் யுத்த வீரனையும் உன் கையில் ஒப்புக் கொடுத்தேன் என்று தெளிவாக நடத்தினார்.

யோசுவா தேவனின் தெளிவான சித்தம், நடத்துதல் ஆலோசனைக் கேட்டு முழுவதும் தேவனைச் சார்ந்து எரிகோவிற்கு எதிரே சென்றபடியால் வெற்றி கிடைத்தது.

இதே முறையை யோசுவா தொடர்ந்து இருக்க வேண்டும். ஆயிக்கு எதிரே யுத்தம் செய்ய உண்டான வழியை கர்த்தரும் கொடுக்கவில்லை. இவனும் கேட்கவில்லை.

மாறாக என்ன நடந்தது தெரியுமா? வேவுகாரர்கள் சொன்னதை அப்படியே ஏற்றுக் கொண்டான், எல்லோரும் போக வேண்டியது இல்லை, இரண்டாயிரம் மூவாயிரம் பேர் போனுல் வென்று விடலாம் என் அவர்கள் முந்தய வெற்றி போதையில் சொன்னார்கள்.

நிதானிக்க வேண்டிய யோசுவா நிலைதடுமாறி வேவுக்காரர்களின் சத்தத்தை பிரதானமாக ஏற்றுக் கொண்டான். தேவ ஆலோசனைக்கு காத்திராமல் யுத்ததிற்கு ஆட்களை அனுப்பினான். அவர்களோ ஆயியில் முறிந்து விழுந்தார்கள்.

மோசே கன்மலையில் முதல்முறை வெற்றி, இரண்டாம் முறை சுயமுயற்சியால் தேவ சித்தத்தில் தோல்வி கண்டாரே அதே நிலை யோசுவாவுக்கும் வந்து விட்டது. எரிகோவில் ஏற்றம், ஆயியில் இறக்கம் கண்டான்.

பிரியமானவர்களே! சில வேளைகளில் நமது மிதமிஞ்சிய நம்பிக்கையின் நிமித்தமும், சில அனுபவசாலிகளின் ஆலோசனையினிமித்தமும் தேவ சித்தத்திற்கு காத்திராமல் நேரடியாய் காரியத்தில் இறங்கி விடுகிறோம். இது பெரிய ஆபத்து. முன்னமே கர்த்தரை விசாரித்து இருந்தால் தோல்விக்கு முன்னேயே தேவ கோபத்தை சரி செய்து இருக்கலாம்.

குடும்பத் தலைவர்களுக்கும், ஊழியர்களுக்கும் ஒரு வார்த்தை, நேற்றைய காரியத்திற்கு தேவ சித்தம் பார்த்ததை நேற்றோடு விட்டுவிட வேண்டும். இன்றைக்கு தேவசித்தம் என்ன? என்பதை காத்திருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

பழையதை வைத்துக் கொண்டு பயணம் செய்ய நினைத்தால் எதிர்பாராத ஆயிக்கள் நம்மை சந்திக்கும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சில வேளைகளில் நம்பத் தகுந்த மனிதர்கள், வட் டாரங்களில் இருந்து தோல்விக்குரிய ஆலோசனைகள் வரும் என்பதை நினைவில் வையுங்கள். எப்பேர்ப்பட்ட ஆவிக்குரிய மனிதராக இருந்தாலும் அவர் சொல்லும் ஆலோசணைகள், கருத்துக்களை தேவ சமுகத்தில் வைத்து நிதானிக்க நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். அல்லாத பட்சத்தில் ஆவிக்குரிய ஸ்திரத் தன்மையை நீங்கள் இழந்து போவீர்கள்.

ஆயி பட்டணத்தின் தோல்வி கண்டு துவண்டு போன யோசுவா தேவ சமூகத்தில் விழ – அழ தன்னை ஒப்புக் கொடுத்த போது கர்த்தர் சில காரியங்களைச் சொன்னார் யோசுவா செய்தார்.





இப்போது யோசுவா எட்டாம் அதிகாரம் முதல்வசனத்தைக் கவனியுங்கள் கர்த்தர் யோசுவாவை நோக்கி நீ யுத்த ஜனங்கள் **யாவரையும் கூட்டிக் கொண்டு** எழுந்து ஆயி பட்டணத்தின் மேல் போ இதோ ஆயியின் ராஜாவையும். அவன் ஜனத்தையும் அவன் பட்டணத்தையும் அவன் நாட்டையும். உன் கையில் ஒப்புக் கொடுத்தேன்.

அல்லேலூயா! கர்த்தர் சொன்னபடி யோசுவா சென்றார். வென்றார், இங்கே மேலே உள்ள வசனத்தில் தடித்த எழுத்தை கவனித்துப் பாருங்கள் **யாவரையும் கூட்டிக் கொண்டு போ** என்று கர்த்தர் சொன்னார். இரண்டாயிரம், மூவாயிரம் போதும் என்று மக்கள் சொன்னார்கள் (யோசு 7:3) இதிலிருந்து நமது வழியும் கர்த்தரின் வழியும் நேர் வித்தியாசம் என புரிகிறதா?

யோசுவாவிற்கு புரிந்து விட்டது அதன் பிறகு கர்த்தர் கற்றுத் தந்த முறைபடியே யுத்தம் செய்தார் – சித்தம் செய்தார்.

சிறந்த தலைமைத்துவம், எதற்கும் முகதாட்சண்ம் காண்பிக்காத யோசுவாவின் வாழ்வில் அடுத்து ஒரு காரியத்தை வேதம் தெளிவாக பதித்து வைத்து உள்ளது. முன்னே சொன்னது போல யோசுவாவின் மாம்சம் வெளிப்பட வில்லை, மாறாக அவரது இரக்கத்தின் விளைவால் தேவசித்தம் கேட்காமலே உடன் படிக்கை செய்து கொண்டார்.

பழைய செருப்பு, காய்ந்த ரொட்டி, அழுக்கு வஸ்திரம் இந்த வேஷத்தோடு தந்திர வார்த்தைகளை மூட்டை கட் டிக் கொண்டு கிபியோன் பட்டணத்தார். யோசுவாவிடத்தில் வந்தனர். யோசுவாவிற்கு மனம் இறங்கி விட்டது.

யோசுவா இந்த கந்தை பட்டாளத்தை பார்த்தவுடன் தன்னையே மறந்து தேவனுடைய வார்த்தைக்கு எதிராக செயல்பட ஆரம்பித்து விட்டார் என்பதுதான் வேதனைக்குரிய காரியம்.

தேவன் கொடுத்த கட்டளைகளை கவனித்துப் பாருங்கள்.

1. அவர்களோடே உடன்படிக்கை பண்ணவும், அவர்களுக்கு இரங்கவும் வேண்டாம். உபா 7:1, 2

2. அவர்களோடும் அவர்கள் தேவர்களோடும் நீ உடன்படிக்கை பண்ணுதிருப்பாயாக. யாத் 23:32

இந்தப் பிரமாணங்களை யோசுவா தெளிவாய் அறிந்து இருந்தார். ஆனுல் அவரின் இரக்கம் அவருக்கு இறக்கத்தை கொடுத்து விட்டது.

கிபியோனின் குடிகள் வந்தபோது யோசுவாவும் இஸ்ரவேலின் மூப்பரும் செய்ததைக் கவனித்துப் பாருங்கள்.

1. கர்த்தரின் வார்த்தையைக் கேளாமல் அவர்களுடைய போஜன பதார்த்தத்தில் சிறிது வாங்கிக் கொண்டார்கள். யோசு 9:14

2. யோசுவா அவர்களோடே சமாதனம் பண்ணி...(9:15)

3. அவர்களை உயிரோடு காப்பாற்றும் உடன்படிக்கையை அவர்களோடு பண்ணினுன்.(9:15)

4. சபையின் பிரபுக்கள் அவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்தார்கள்.

எவ்வளவு பெரிய குழப்பம் பாருங்கள். ஊழியர்களே! தலைவர்களே! கொஞ்சம் கவனம் தேவை. உங்கள் இரக்கம் வீணுக பயன்படுத்தப் படக்கூடாது. கவனமாயிருங்கள்.

இந்தக் கடைசி காலத்தில் ஆவிகளை பகுத்தறியும் வரத்தை எல்லோர் மேலும் தேவன் ஊற்றுவாராக. இயேசுவிடம் எண்ணற்றோர் வந்தனர். ஆனுலும் அவர்கள் இன்ன ஆவி உடையவர்கள் என்று அவர் தெளிவாய் அறிந்து இருந்தார்.





சில பிழைப்புத் தேடிகள் பஞ்ச வேஷம் போட்டுக் கொண்டு

1. உமக்கு அடிமைகள்

2. கர்த்தருடைய நாமத்தின் பிரஸ்தாபத்தை கேட்டு வந்தோம்.

3. தூர தேசத்தில் இருந்து வந்தோம் என்ற பசப்பு வார்த்தைகளுடன் வருவார்கள். கவனமாக இருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட கூட்டத்தில் விசுவாசிகளும் இருக்கலாம். ஊழியரும் இருக்கலாம், நீங்கள் சரியாய் பகுத்தறிய வேண்டும்.

நான் யோசுவாவைப் போல் ஏமாந்த நாட்கள் உண்டு, யோசுவா ஏமாந்தாலும் உடனே சுதாரித்துக் கொண்டார். அவர்களின் வாயின் வார்த்தையின் படியே அவர்களை விறகு வெட்டுகிற, தண்ணீர் சுமக்கிற அடிமைகளாக நியமித்து விட்டார். எனது நிலை அப்படி அல்ல நான் நிதானிப்பதற்கு முன்னதாகவே இந்த கிபியோனியர் முதுகில் குத்தி விட்டார்கள்.

கர்த்தர் வெளிப்படுத்தினார் அதனுல்தான் உங்களிடம் வருகிறோம். உங்கள் சபைக்கு வருகிறோம் என்று கிபியோனியர் போல் வருவார்கள். ஏமாற்றி உடன்படிக்கை பண்ணிக் கொள்ள செய்வார்கள். நீங்கள் வசமாய் சிக்கிக் கொள்வீர்கள், கவனமாய் இருங்கள்.

யோசுவாவின் நிலை, தர்ம சங்கடமான நிலை இவர்களை அயலார் என்று அணைக்க முடியவில்லை, பகைவர் என்று அழிக்க முடியவில்லை. காரணம் உடன்படிக்கையை மீற அவர் மனம் இடம் கொடுக்க வில்லை.

மிகவும் பரிதாபம், தேவ பிரமாணத்தை மீறினதைக் குறித்து மனம் துடிக்கவில்லை, மாறாக கிபியோனியரிடம் செய்த உடன்படிக்கையை உடைக்க மனம் வரவில்லை.

பிரியமானவர்களே! நான் என்ன யோசனையில் இதை எழுதுகிறேன் என்று நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

சிலரிடம் செய்த உடன்படிக்கையை கர்த்தரின் நாமத்தில் சொல்லப்பட்டது என்று உடைக்காமல் இருக்கிற நீங்கள் இதற்கு முன்பு கர்த்தரின் பிரமாணத்தையே முறித்து விட்டீர்களே! அதைக் குறித்த உணர்வு உங்களுக்கு ஏன் வரவில்லை என்று கேட்கிறேன்.

தைரியமாக சொல்கிறேன், நீங்கள் தேவசித்தமில்லாத சிலரோடு வசனத்திற்கு ஒவ்வாத விதத்தில், ஆனுல் கர்த்தரின் நாமத்தில் ஆணையிட்டு கொடுத்து இருக்கலாம். உங்கள் புத்தி தெளிந்த பிறகு, அந்த உடன்படிக்கை உயிராய் இருக்க வேண்டியது அவசியமில்லை. கர்த்தரின் நாமத்தில் கர்த்தரின் வசனத்தைக் கொண்டு உடைத்துப் போடுங்கள். உங்கள் மேல் பழி சுமராது.

இந்த வரிகள் அநேகரின் கண்களை திறக்கும் என்று நம்புகிறேன். இரட்சிக்கப்பட்ட சிலர், விவாகம் ஆன சிலர் ஏதோ ஒரு விபத்தாக, ஒரு சிலருக்கு தேவ வசனத்திற்கு மாறாக ஆணையிட்டுக் கொடுத்து விட்டு மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவிக்கிறார்கள். அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் தருகிற உன்னதமான ஆலோசனை இது. அந்த உடன்படிக்கை செல்லாது, நில்லாது கவனமாய் இருங்கள்.

முந்தின மீறுதலைக் குறித்து இஸ்ரவேலர் கவலைப் படவில்லை. மாறாக உடன்படிக்கைக்கு உயிர் கொடுக்கவே பாடுபட்டார்கள்.

1. எங்களை வஞ்சித்தீர்கள் யோசு 9:22
2. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள் யோசு 9:23





என்று கிபியோனியரைக் குறித்து சொல்லிவிட்டு அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா?

என் தேவனுடைய ஆலயத்திற்கு விறகு வெட்டுகிறவர்களாகவும், தண்ணீர் எடுக்கிற பணிவிடைக்காரர் களாகவும் இருப்பீர்கள். இந்த ஊழியம் உங்களை விட்டு நீங்க மாட்டாது. 9:23

ஆ. கர்த்தாவே! என்ன இது? இந்த ஏமாற்று பேர்வழிகள் ஆலயத்திற்கு வந்து விட்டார்கள். அதுவும் நீங்காத ஊழியத்திற்கு!

என்னால் இதற்கு மேல் எழுதமுடியவில்லை. தலைவர்களே! உங்கள் தவறுகளை திருத்திக் கொள்ள முடியாமல் தன்மானப் பிரச்சனையாய் எடுத்துக் கொண்டு, அநேக கிபியோனியரை தேவனுடைய ஊழியத்தில் இறக்கி விட்டு விட்டீர்களே! இது நியாயமா?

அழைக்கப்பட்டவனுக்கும் ஊழியம், அழைக்கப் படாதவனுக்கு ஊழியம், இதுதான் இன்றைய ஊழியத்தின் உண்மை நிலை. ஊழியங்கள் திசைகெட்டுப் போவதற்கு காரணம், கள்ள உபதேசம் வருவதற்கு காரணம் சபைகள் சுயலாபத்திற்காய் உழைப்பதற்கு காரணம், சில தந்திரக்கார கிபியோனியர் சபைகளில் இடம் பிடித்து விட்டதே.

அதற்கு காரணம் யோசுவா யோசிக்காமல் செய்து கொண்ட தவறான உடன் படிக்கையே! ஆவிக்குரியவர்களே! அசதியை ஒழிப்போம். யோசித்து செயல் படுவோம்.

# 5

# தலை சிறந்த தலைவன்

வேதத்தில் உள்ள ஒவ்வொரு தலைவர்களும் தனித்தன்மையுடன் பிரகாசித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மோசேயின் தலைமைத்துவம் வேறு, நெகேமியாவின் தலைமைத்துவம் வேறு. இப்படி தங்களின் தெரிந்து கொள்ளுதலுக்கும், தாங்கள் தெரிந்து கொண்டவைகளுக்கும் ஏற்ப கிருபை பெற்று இருந்தார்கள் – கிரியை செய்பவர்களாய் இருந்தார்கள்.

இவர்கள் யாவரிலும் தனித்தன்மையோடு தலைமைத்துவத்தை நடத்தியவர் இந்த யோசுவா. முன்னே நான் குறிப்பிட்டு இருந்தபடி ஆரம்பகாலத்தில் எந்த வித குடும்ப, கோத்திர பின்னணி பலம் இல்லாத இவர் படிப்படியாய் தனது தலைமைத்துவத்தை வளர்த்துக் கொண்டு அதைப் பிடித்துக் கொண்டது மாபெரும் சிறப்பு.

யோசுவா, பெயரால் இயேசு கிறிஸ்துவுக்கும் தனது ஊழியத்தால் பரிசுத்த ஆவியானவருக்கும் முன் மாதிரியாக உள்ள இவர், மோசேயினுல் எகிப்தை விட்டு எந்த நோக்கத்துடன் இஸ்ரவேலர் அழைத்துக் கொண்டு வரப்பட் டார்களோ! அந்த நோக்கம் நிறைவேறும்படி கானனை பகிர்ந்து தேவனுடைய பல நூற்றாண்டு கால திட்டத்தை திறம்பட செய்து முடித்தவர் இந்த யோசுவா.





தேவனுடைய திட்டத்தை பூரணப்படுத்த முடியாமல் முடிவு எய்தியவர்கள் பலர் உண்டு. தேவனுடைய திட்டம் பூரணப்பட ஒத்துழையாமல் ஒதுங்கிப் போனவர் பலர் உண்டு. இதற்கு மோசேவும் ராஜாவாகிய சவுலையும் கூட முன் உதாரணமாக சொல்ல முடியும்.

எனவே பிரியமானவர்களே தேவனின் அழைப்பைப் பெற்ற நாம் நாளுக்கு நாள் கூடுதலான பலத்தை, கிருபையை தேவனிடத்தில் இருந்து பெற்றுக் கொள்வது மாத்திரமல்ல, தேவனுடைய அநாதி திட்டம் நம்மூலமும், நமக்குள்ளும் நிறைவேறும்படி நமது தலைமைத்துவத்தை பலப்படுத்திக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

யோசுவாவின் மிகச் சிறந்த தலைமைத்துவத்திற்கு பல காரியங்களை வேதத்தில் ஆவியானவர் எழுதி வைத்து இருக்கின்றார். நீங்கள் அவைகளை ஆவியானவரின் துணையோடு கண்டுபிடித்து அவைகளை உங்கள் அனுபவமாக்கிக் கொண்டால், நிச்சயம் நீங்கள் உங்கள் சபையில், பட்டணத்தில் ஐக்கியத்தில் அடுத்த கட்ட தலைவர்களாக எழும்புவீர்கள் என்பது திண்ணம்.

**1. பரிசுத்தம் செய்கிறவன்.** யோசுவா ஏழாம் அதிகாரத்தில் மாபெரும் தோல்வியை இஸ்ரவேலர் தழுவினர். உடனே தலைவனுகிய யோசுவாவின் செயலை கவனித்துப் பாருங்கள். தன் வஸ்திரத்தைக்கிழித்துக் கொண்டு உடன் படிக்கை பெட்டியின் முன்பு மாலை வரை விழுந்து கிடந்தான்.

சபையின் தலைவன் அல்லது குடும்பத் தலைவன் தங்களுக்கு ஏற்படும் சோதனை வேதனை நேரங்களில் கர்த்தரின் சமூகத்தில் விழுந்து அழுது அவரிடத்தில் அதன் காரணத்தையும் அதற்கான பரிகாரத்தையும் கேட்டு அறிந்து மக்களையும் குடும்பத்தையும் காப்பாற்ற வேண்டும்.

யோசுவா தனது ஜனத்தை இரண்டு விதத்தில் பரிசுத்தம் பண்ணி, கர்த்தரின் இரக்கத்தையும் பாதுகாப்பையும் மக்களுக்கு பெற்றுத் தந்தது குறிப்பிட வேண்டிய சிறப்பம்சம்.

முதலாவது இஸ்ரவேலர் யோர்தானை விட்டு கடந்த உடன் கில்கால் எனுமிடத்தில் எல்லா இஸ்ரவேலருக்கும் தேவனின் கட்டளைப்படி விருத்த சேதனம் பண்ணினான் (5:3)

அதாவது தனது சபை முழுவதையும் தேவனுடைய பிரமாணத்தின்படி பரிசுத்தப் படுத்தினான். இந்த மாபெரும் தேசம் தழுவிய பரிசுத்த நிகழ்ச்சிக்குப்பின் நடைபெற்ற சம்பவம் என்ன தெரியுமா? சேனையின் அதிபதியானவர் யோசுவாவிற்கு முன்பாக நின்று எரிகோவை உனக்கு கொடுத்தேன் என்று வாக்குக் கொடுத்தார் (யோசு 5:14, 6:2)

நன்றாக கவனியுங்கள் எதிரிகளின் மேலும் எரிகோவின் மேலும் சபை வெற்றி பெற பெலன் எப்போது கிடைக்கிறது தெரியுமா? முழு சபையும் தேவ பிரமாணத்தின்படி பரிசுத்தம் அடையும் போதே.

இந்தக் காரியத்தில் யோசுவாவின் பங்கு மிகவும் முக்கியம். தேவனிடத்தில் ஆலோசனை பெற்றது மாத்திரமல்ல அதைத் தானே நிறைவேற்றி வைத்தான் என்பது குறிப்பிடத் தக்கது. சரியான நேரத்தில், சரியான விதத்தில், சரியான காரியத்தை செய்த சரியான தலைவன் இந்த யோசுவா.

பிரிய ஊழியர்களே! உங்கள் சபை ஜெயிக்கிற சபையாய் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். இரண்டாம் விசை விருத்த சேதனம் பண்ணினான் என்பதை கவனித்துப் பாருங்கள்.

ஏதோ ஒரு காலத்தில் நீங்கள் உங்கள் சபையில் சத்தியத்தை பிரசங்கித்து இருக்கலாம், ஆனால் இப்போது





உங்கள் நிலை என்ன? என்பதை நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.

இஸ்ரவேலரின் பாளயத்தில் தற்போது யாவரும் புதியவர்களே, எனவே இந்த இரண்டாம் விசை விருத்த சேதனத்தை யோசுவா கட்டளையிட்டார். இதை நமது சபையோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

ஆண்டுக்கு ஆண்டு புதியவர்கள் வந்து கொண்டே இருக்கிறார்கள். நீங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு பிரசங்கித்த மூல உபதேசப் பிரசங்கங்களை அவர்கள் கேட்கவே இல்லை. எனவே நீங்கள் அவைகளை இரண்டாம் விசை பிரசங்கிக்க வேண்டும்.

இன்றைய அளவில் சபையில் அடிப்படை சத்தியங்கள் போதிக்கப்படுவதில்லை. பரிசுத்ததிற்கான உபதேசங்கள் உறைக்கப்படுவதில்லை. அதனால்தான் பரிசுத்தம் இல்லாமல் பரிசுத்தவான்களின் சபை வளர்ந்து விடுகிறது. இது வளர்ச்சி அல்ல ஊது காமாலை நோய் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விருத்தசேதனம் என்பது சாதாரண காரியம் அல்ல. அது நோவு உண்டாக்குகிற காரியம். அது ஆரம்பத்தில் நோவுதான். ஆனால் அது தேவனுக்காக ஏற்படுகிற நோவு என்கிற தெளிவு வந்து செய்தால்பிற்காலத்தில் நோவும் வராது, சாவும் வராது. சேனைகளின் அதிபதி எதிரே நிற்பார்.

விசுவாசிகளுக்கு நோவு ஏற்படுமே என்பதற்காகவே பல ஊழியக்காரர்கள் உண்மை சத்தியத்தை எடுத்துச் சொல்ல அஞ்சுகிறார்கள். காசு கொடுக்கும் கனவான்களும் சபையை விட்டு போய்விடுவார்களே என்று அஞ்சி சத்தியத்தை மறைத்தால் அடக்கத்துடன் சொல்கிறேன் உங்கள் சபையே அடக்கத்திற்கு செல்ல வேண்டியதிருக்கும், மறந்து விடாதீர்கள்.

புத்தி சொல்லி கடிந்து சீர்படுத்தவேதான் சபை– சபைக்கு தலைவனே தவிர, சந்தா வசூலித்து சங்கம் நடத்த அல்ல என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்கோ படித்தது இங்கு ஞாபகத்திற்கு வருகிறது. இங்கே எழுதுகிறேன், ஒப்புக் கொள்ளாவிட்டால் எனக்கு கவலை இல்லை

பிரசங்கியே நீ பிரசங்கபீடத்தின் மேல் நிற்கும் போது பாவ உணர்வை மக்கள் உணரும்படி மக்கள் மேல் கல் எறிய வேண்டும், அல்து குறைந்த பட்சம் மக்கள் உன்மேல் கல் எறிய வேண்டும். அப்போதுதான் நீ செய்தது உண்மையான பிரசங்கம்.

பிரசங்க இலக்கணத்தின்படி மேலே சொன்ன கூற்று சரியில்லாமல் போகலாம். ஆனுல் அதுதான் உண்மை. புறையோடின புண்களை, பிதுக்கி இரணத்தைக் கட்டவே ஊழியக்காரன். அதைவிட்டு விட்டு தடவிக் கொடுத்து பொறுப்பை தட்டிக் கழிப்பதற்கு அல்ல ஊழியக்காரன். கவனமாயிருங்கள்.

நோவு உண்டானுலும் பரவாயில்லை, யோசுவாவைப்போல் முழுச் சபையும் சத்தியத்திற்குள் நடத்தி பரிசுத்தப் படுத்துங்கள், தேவன் உங்கள் தலைமைத்துவத்தை கனப்படுத்துவார். நிலைப் படுத்துவார்.

ஆயி பட்டணத்தில் மிகப் பெரிய தோல்வியை இஸ்ரவேல் புத்திரர் சந்தித்தனர். யோசுவா வாளா இராமல் தேவ சமூகத்தில் விழுந்து, விழுகைக்கு காரணம் என்ன என்பதை தெளிவாக கண்டுபிடித்து விட்டார்.

அத்தோடு நிற்கவில்லை கோத்திரம் கோத்திரமாக அழைத்து, வம்சம் வம்சமாக அழைத்து, குடும்பம் குடும்பமாக அழைத்து அந்த ஆகான் என்பவன் தான் இதற்கு காரணம் என்பதை கண்டுபிடித்து விட்டான்.





சீட்டு ஆகான் பெயருக்கு விழுந்ததும் தீர்ப்பை சொல்லவில்லை. நன்றாக கவனியுங்கள் சில வேளைகளில் தேவன். இந்த தவறை இன்னுன்தான் செய்தான் என்று வெளிப்படுத்திஞலும் நாம் வேகம் காட்டக் கூடாது. சற்று பொறுத்து குற்றவாளியின் செயலை உலகப் பிரகாரமாக உறுதிப்படுத்தி கொள்ள வேண்டியது அவசியம்.

யோசுவாவின் செயலைப் பாருங்கள் ஆகான் மேல் கோபம் கொள்ளாமல் மகனே நீ இப்போது இஸ்ரவேலின் தேவனுகிய கர்த்தரை மகிமைப்படுத்து என்று (யோசு 7:19) மிக பக்குவமாக பட்சமாக பேசினுர். முடிவு தனது சொந்த வாயினுலேயே நடந்தது என்ன என்பதை அறிக்கை இடுகிறான்.

இவனது அறிக்கையையும் யோசுவா முழுமையாக நம்பவில்லை. இவன் சொன்னது சரிதானு என்பதை ஆட்களை அனுப்பி ஆராய்ந்து அறிந்து கொண்டான்.

இங்கே மற்றென்றையும் நாம் கவனிக்க வேண்டும், சில வேளைகளில் சிலர் சொல்லுகிற அறிக்கைகளை அப்படியே நம்பி தீர்ப்பு வழங்கி விடக் கூடாது. சிலரைத் தொலைத்து கட்டவோ அல்லது சிலரைக் காப்பாற்றவோ வசதியாக அறிக்கை பண்ண, சிலர் தங்களை விற்றுப் போடுகிறார்கள் என்பது உண்மை.

எனக்கு தெரியும், இது ஒரு சபையில் நடந்த சம்பவம் தான். ஒரு வாலிபப் பெண் தனது ஊழியக்காரனை பழிவாங்க வேண்டுமென்று, ஒரு சிலராடு சேர்ந்து கொண்டு பெரிய அறிக்கை செய்வதுபோல் ஊழியக்காரன் மேல் எல்லா பாவ பழியை தூக்கி போட்டு விட்டாள். அந்த ஊழியக்காரன் தனது நிலையை விளக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. மாறாக தேவ சமூகத்தில் தனது காரியத்தை வைத்து விட்டு தனது ஊழியத்தை தொடர ஆரம்பித்தார்.

ஆனுல் அதை பலர் பெரிய காரியமாக்கி அவரை அந்த இடத்தைவிட்டு விலக்க முனைப்பாய் ஈடுபட்டார்கள். காரியம் அந்த சபையின் தலைமை போதகர் வரை சென்றது. அவரோ யோசுவாவைப் போல் தெளிவுள்ள சிறந்த தலைவர். அவர் யோசுவாவைப் போல்

1. கர்த்தரிடத்தில் விசாரித்தார்.
2. அந்த குறிப்பிட்ட நபரை விசாரித்தார்.
3. ஆட்களை அனுப்பி விசாரித்தார்.

ஒரு தெளிவு வந்தது அவர் சரியான தீர்ப்பு கூறினுர், அதை பலரால் ஏற்க முடியவில்லை. ஆனுல் ஊழியக்காரன் மேல் சேற்றை வாரி இறைத்த அதே பெண் சில காலம் சென்ற பின் ஒரு ஊழியக்காரனுக்கு வாழ்க்கைப் பட்டாள். உலகுக்கு அப்போதுதான் அவளின் அக்மார்க் பொய் புரிந்தது.

இந்த சம்பவத்தை குறிப்பிட ஒரு காரியமுண்டு ஒருவர் செய்யும் எந்த அறிக்கையும் உறுதி செய்யப்படாமல் ஏற்றுக் கொள்ள கூடாது. அது சாதக அறிக்கையானுலும் சரி, பாதக அறிக்கையானுலும் சரி இதே அளவுகோல் தான் பயன்படுத்த வேண்டும்.

மகனே என்று ஆகானை அழைத்த அதே யோசுவா காரியத்தை உறுதி செய்து கொண்ட பின்பு சற்றும் தாமதிக்க வில்லை. நீ எங்களை கலங்கப் பண்ணின படியால் கர்த்தர் உன்னை கலங்கப் பண்ணுவார் என்று சொல்லி கல் லெறிவதற்கு ஒப்புக் கொடுத்தார்.

குற்றம் செய்து சபையை கலங்கப் பண்ணும் நபர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் கவலைப்படகூடாது. இவர் பழைய விசுவாசி, பழக்கமான விசுவாசி, படை பலம் உள்ள விசுவாசி என்று எவருக்கும் மூடிபோட்டு மறியாதை செலுத்தக் கூடாது.





ஊழியக்காரனின், தலைவனின் வேலை என்ன தெரியுமா? தனது ஜனத்தை பரிசுத்தம் பண்ணுவதும் பரிசுத்தக் குலைச்சலை வெளியேற்றுவதுமே. மறந்து விடாதீர்கள்.

**2. அதிகாலமே எழுந்திருக்கிறவன்** யோசுவா புத்தகத்தில் ஒரு குறிப்பிட்ட வார்த்தை திரும்ப, திரும்ப வருகிறதை நீங்கள் காணலாம்.

1. அதிகாலமே யோசுவா எழுந்து (3:1)
2. யோசுவா அதிகாலமே எழுந்திருந்தான் (6:12)
3. யோசுவா அதிகாலமே எழுந்திருந்து (7:16)
4. அதிகாலமே யோசுவா எழுந்திருந்து (8:10)

யோசுவா தனது காரியத்தை அல்லது நாளை, அதிகாலமே துவங்கியிருக்கிறார். அதனுல் அவர் எவ்விடத்திலும் வெற்றி பெற்றார் என்பது குறிப்பிட வேண்டிய அம்சம்.

எந்தத் தலைவன் அதிகாலையில் தனது பணியை தனது நாளை துவக்குகிறானோ அவனது பணியும் அந்த நாளும் மிகுந்த ஆசீர்வாதமாக அமையும் என்பது உண்மை.

ஜெபத்திற்காக எழுந்தார் என்று இங்கு நான் குறிப்பிடவில்லை. மாறாக அவர், தேவன் தனக்கு கொடுத்த வேலையை மிகுந்த ஆவலுடன் சுறுசுறுப்பாக செய்தார் என்பதை குறிப்பிட்டுச் சொல்லும்படியே இஃதினை இங்கு குறிப்பிடுகிறன்.

கீல் முனையில் கதவு ஆடுகிறது போல, சிலர் தூக்கத்தில் படுக்கையில் ஆடுவதாலேயே துக்கத்தை சம்பாதித்து கொள்கிறார்கள்.

ஒரு ஆவிக்குரிய தலைவர் என்னைப் பார்த்து அதிகாலையில் ஊழியக்காரன் எழும்ப வேண்டும் என்று சொல்கிறார்களே, அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன என்று கேட்டார். அவர் அப்படி எழும்புவதை விரும்பவில்லை என்பதை கேள்வியிலேயே புரிந்து கொண்டேன்.

எனக்கு அதைப்பற்றி சொல்ல கருத்து ஏதுமில்லை. ஆனால் நான் காலையில் ஏழு மணிக்கு மேல்தான் எழுந்திருக்கிறேன் என்றேன். அவர் பூரித்து போனார் நான் தொடர்ந்தேன். மனிதர்கள் தூங்கும் நேரத்தில் எனது பணிகளை செய்கிறேன். புத்தகம் எழுதுவதற்கு, வாசிப்பு, வேதம், ஜெபம் ஆகிய எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு காலை 3.30 மணிக்குத்தான் எனது படுக்கைக்கே போகிறேன் என்றேன். அவர் ஆச்சரியத்தில் மூழ்கி விட்டார்.

இப்போது சில காரியங்களை முன்னிட்டு எனது தூக்க நேரத்தை மாற்றிக் கொண்டேன். காரணம் காலை ஐந்து மணி முதல் ஆறு மணி வரை தினமும் எனது சபையில் நடக்கும் துதி ஆராதனையை நானே நடத்துகிறேன்.

தலைவன் சுறுசுறுப்பாக இல்லாத பட்சத்தில் அவனது ஊழியம் துருபிடித்து விடும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

வேதத்தை நன்றாய் வாசித்துப் பாருங்கள், சாமுவேல் தாவீது, யோபு ஆகியோர் அதிகாலையில் தங்கள் பணிகளை தொடர்ந்தார்கள். நமது இரட்சகராகிய இயேசு மாற் 1:35 அதிகாலையில் எழுந்து வனாந்தரமான ஓர் இடத்திற்கு சென்று ஜெபித்தார் என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இயேசு கிறிஸ்து சோம்பேறிகளை ஊழியத்திற்கு அழைக்கவில்லை. இயேசுவின் சீஷர்கள் பன்னிருவருமே,





தாங்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலைகளை மிகப் பொறுப்பாய் செய்தவர்கள்.

எனக்கு நேரமில்லை, நேரம் போதாது என்று தங்களைத் தாங்களே மிக அலுவல் நிறைந்தவராய் காட்டிக் கொள்கிறவர்கள் மிகவும் பரிதாபத்திற்குரியவர்கள். தேவன் 24 மணி நேரத்திற்கு மிஞ்சிய பொறுப்பை ஒரே நாளில் செய்யத்தக்கதாய் எவருக்கும் பொறுப்பு கொடுப்பதில்லை.

சில காரியங்களில் கலந்து கொள்ள நேரம் இல்லை மற்றுமொரு காரியத்திற்கு அந்த வேளையை ஒதுக்கியுள்ளேன் என்று சொல்லலாமே தவிர நேரமில்லை என்று கடமையை தள்ளிப் போடுகிறவன் தலைவனாக இருக்க தகுதியற்றவன்.

எனக்கு கர்த்தர் அருளிய தலைமைப் போதகர் திருமறைப் பெரியார் அவர்களுக்காய் கர்த்தரை துதிக்கிறேன். அவருக்கு வயது அதிகம், பலவீனம் உண்டு. தனக்கு கொடுக்கப்பட்ட 200 கிளைச் சபைகள், ஊழியர்கள், கல்வி நிலையங்கள், வேதாகம கல்லூரி இவைகளில் அவருடைய பங்கு கொஞ்சம் கூட குறைந்தது இல்லை. எல்லா இடங்கள், எல்லா கூட்டங்கள் ஆகியவற்றில் பங்கு கொள்வார்.

இப்படி பலவீனம், பொறுப்புகள், வெளி ஊர், வெளிநாடு, ஊழியம் இவைகளின் மத்தியில் அவரது ஜெப நேரம், வேத வாசிப்பு உட்பட தனது எழுத்துப் பணியையும் சீராக சிறப்பாக செய்கிறார். இதைக் கண்டு பெரிய வியப்பு இன்னும் எனக்கு உண்டு.

தலைவனாவது என்பது ஏதோ காற்றில் அடிக்கப்பட்டு மேலே எழுவது அல்ல, தனது பொறுப்புகளை சீராய் செய்து ஊர்ந்து மேலே ஏறுவது அஃது.

## 3. வாக்கை நிறைவேற்றுகிறவன்

சொல்வது ஒன்று
செய்வதோ மற்றென்று
கள்ளத்தனம் உள்ளத்தில்
மாறுவது என்று.

என ஒரு பாடல் உண்டு. இன்று அநேகர் இப்படித்தான் தலைவர்களாக இருக்கிறார்கள். சொன்ன சொல்லை காப்பாற்றாதவன் தலைவனுக இருக்க முடியாது. ஆணையிட் டதில் நஷ்டம் வந்தாலும் தவறாது இருப்பவனே தலைவன் என்பதை மறந்து விடக் கூடாது.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், சொல்வதை செய்வோம், செய்வதை சொல்வோம் என்ற புதிய சொற்றொடரை தேர்தல் நேரத்தில் அறிவித்தார். அதில் அவர் எத்தனை விழுக்காடு வெற்றி பெற்றார் என்பது எனக்குத் தெரியாது.

ஆனுல் ஆவிக்குரியவர்கள், அந்த சொற்றொடரை தங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். ஒரு பிரசங்கியார் பிரசங்கிக் எழுந்தார். பிரசங்கத்தின் கரு என்னவென்று அறிந்திருந்த படியால் பிரசங்கத்திற்கு முன்பாக வேதத்தில் இருந்த ஒரு பகுதியை வாசிக்கச் சொன்னுர்.

அது இயேசு சொன்ன வார்த்தை **அவர்கள் சொல்லுகிற படி செய்யுங்கள், ஆனுல் அவர்கள் செய்கையின் படியோ செய்யாதிருங்கள்.** இந்த வசனத்தை அவர் ஏன் பிரசங்கத்திற்கு முன்பாக வாசிக்கச் சொன்னார் என்பதை நீங்களே கண்டு பிடித்துக் கொள்ளுங்கள்.

எரிகோவை வேவு பார்க்க யோசுவா இரண்டு பேரை அனுப்புகிறார். அவர்கள் போன இடத்தில் அவர்களுக்கு





ராகாப் என்கிற பெண் உதவி செய்கிறாள். அதற்கு கைமாறாக எரிகோவின் மேல் நீங்கள் யுத்தம் செய்து அழிக்கும் போது உங்களை தப்பவிடுவோம் என்று அந்த உளவாளிகள் வாக்கு கொடுத்து விட்டு பின்னர் அதை யோசுவாவிற்கு தெரியப்படுத்துகிறார்கள்.

யோசுவாவின் முயற்சியால் எரிகோவை இவர்கள் வீழ்த்துகிறார்கள். யோசுவாவின் மனதைப் பாருங்கள், யுத்தவீரர்கள் எரிகோவின் மக்களை சங்காரம் பண்ண தீவிரித்துப் புறப்படுகையில் அந்தக் குறிப்பிட்ட இரண்டு உளவாளிகளை அழைத்து, நீங்கள் அவளுக்கு ஆணையிட்டபடி அந்த ஸ்திரீயையும் அவளுக்கு உண்டான யாவையும் அங்கிருந்து வெளியே கொண்டு வாருங்கள் என்றான். (யோசு 6:22)

எத்தனை சிறந்த தலைவன் பாருங்கள். தான் ஆணையிட்டதை அல்ல, தனது வேலையாட்கள் தன்னைக் கேட்காமலேயே கொடுத்த ஆணையை நிறைவேற்றுகிற பரந்த, திறந்த மனம் அவருக்குள் இருந்தது. அப்படிப்பட்ட உள்ளத்தை இக்காலத்து தலைவர்களுக்கு கர்த்தர் அருள் வாராக.

பிரியமானவர்களே! நீங்கள் அல்லது உங்களால் அனுப்பப்பட்டவர்கள் என்ன வாக்கை எவர்க்கு கொடுத்தார்களோ, அதை மாற்றாமல், மறைக்காமல் நிறைவேற்ற வேண்டியது உங்கள் கடமை. அவர்கள் என்னை கேட்காமல் வாக்குக் கொடுத்து விட்டார்கள், என்று நீங்கள் சொல்வீர்களாகில் நீங்கள் அனுப்பிய உங்கள் பிரதிநிதிகளை அவமானப்படுத்துவதுடன் உங்கள் தலைமைத்துவத்தை இழிவுபடுத்திக் கொள்கிறீர்கள். மறந்து விடாதீர்கள்.

யோசுவா தனது பிரதிநிதிகள் சொன்னதை நிறைவேற்றினார். நமது மாபெரும் தலைவர் தேவனைப் பாருங்கள், எலியா ஆகாபினிடத்தில் மழை பெய்யாது என்று

சொன்னுர். தேவன் அதை எப்படி நிறைவேற்றுவது என்று கேள்வி கேட்காமல் எலியாவின் வாக்கை நிறைவேற்றினார்.

காபிரியேல் தூதன் சகரியாவினிடத்தில் நான் சொன்னது நிறைவேறும் வரை ஊமையாக இருப்பாய் என்றான். தேவன் அது எப்படி? ஆசாரியன் ஊமையாக இருக்க முடியுமா? என்று கேள்வி எழுப்பாமல் தனது தூதன் சொன்னதை அப்படியே நிறைவேற்றினுர்.

தான் அனுப்பிய தூதர்கள் கொடுத்த வாக்கை நிறைவேற்றுபவனே தலைவன். அப்படி இல்லாமல் அதனை அசட்டை செய்து பொறுப்பை தட்டிக் கழிப்பவன் சந்தர்ப்பவாதி என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

## 4. இணைந்து செயல்படுபவன்

தலைவன் என்றால் தலை என்று தான் பொருள். ஒரு குடும்பத்திற்கு– சபைக்கு, குழுவுக்கு தலை போன்றவனே தலைவன்.

தலை சரீரத்தோடு இணைந்து – இசைந்து இருக்கும்போது மாத்திரமே தனது யோசனைகளை நிறைவேற்ற முடியும், நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

சில தலைவர்கள் வித்தியாசமானவர்கள் – விசித்திரமானவர்கள். இவர்கள் யாரோடும் சேரமாட்டார்கள். தனித்து செயல்பட எப்போதுமே விரும்புவார்கள். இவர்களின் தலைமைத்துவத்தை நன்றாக கவனித்துப் பாருங்கள். நாளடைவில் ஒரு போர்டு, ஒரு லெட்டர் பேடு இவைகளைத் தவிர வேறொன்றும் இவர்களுக்கு மிஞ்சாது.

இணைந்த கரங்கள் எதையும் சாதிக்கும் என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். தலைமைத்துவம் என்பது மிகவும் வித்தியாசமானது, ஒரு தலைவனிடம் எந்த ஒரு தனிப்பட்ட திறமை, வலிமை இல்லாமல் போகலாம். ஆனுல்





பலவிதமான திறன் பெற்ற பலரை ஒருங்கிணைத்து உரிய விதத்தில் பயன்படுத்தி காரியத்தை முடிக்கும் திறன் இருந்தால் போதும். அவர் நாளடைவில் மிகச் சிறந்த தலைவராக மாறிடுவார்.

பட்டாளத்தலைவன், படைவீரரை நின்ற இடத்தில் இருந்து கொண்டே இயக்கி யுத்தத்தை நடத்தி முடிப்பது போலவே, தலைவன் தனது நிலையை தக்க வைத்துக் கொள்ள வேண்டும். நானே எல்லாவற்றையும் செய்வேன். எல்லாம் எனக்குத் தெரியும் என்னுல்தான் எல்லாம் சாத்தியமாகும் எவர் ஆலோசனையும் எனக்குத் தேவையில்லை என்பவன் மார்க்கம் தப்பி அலையும் நட்சத்திரம் என்பதை நீங்கள் அறிந்திட வேண்டும்.

யோசுவா தனது காரியங்களை இஸ்ரவேலரின் மூப்பர்களோடு பகிர்ந்து கொண்டார். அவர்களை இயக்கி மிகச் சரியான செயல்பாட்டை இஸ்ரவேலருக்குள் நிகழ்த்தினுர்.

ஒரு பக்கம் இஸ்ரவேலரின் மூப்பர்களோடு இசைவு மறுபக்கம் ஆசாரியனுகிய எலெயாசாரோடு இசைவு. கானுனை தனியாக அல்ல ஆசாரியனுகிய எலெயாசாருடன் சேர்ந்து பங்கிட்டு யோசுவா கொடுத்தார் என்பது மிக முக்கியம்.

சேர்ந்து ஊழியம் அல்லது கூட்டு ஊழியம் என்பது தேவனின் சித்தம் என்பதை மறந்து விடக் கூடாது. சுயாதீன ஊழியம் என்ற பெயரில் தன்னிச்சையாய், தனியாய் செய்வது தேவ சித்தம் அல்ல என்பதை உணர்தல் வேண்டும்.

## 5.உற்சாகப்படுத்துகிறவன்

மக்களை உற்சாகப்படுத்துவதும் அவர்களின் கிரியைகளுக்கு அங்கிகாரம் வழங்குவதும் தலைவனுக்கு இருக்க வேண்டிய தனித்தன்மையாகும். நாம் ஒரு

சிலரிடத்தில் பொறுப்புகளை கொடுக்கும் போது நாம் எதிர்பார்க்கிறபடி நூறு விழுக்காடு சரியாக அவர்களால் செய்யமுடியாது. அதனால் அவர்கள் வேலையில் குறை காண்பதைவிட அவர்கள் செய்த வேலையில் உள்ள நிறைவுகளை சுட்டிக்காட்டி, உற்சாகப்படுத்த வேண்டியது முக்கியம்.

மீதியானியருக்கு பயந்து, கொஞ்சம் கோதுமைகளை போரடித்துக் கொண்டிருந்த போது, கர்த்தருடைய தூதன் சொன்ன வார்த்தைகளை கவனித்துப் பாருங்கள், பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடு கூட இருக்கிறார் என்றார். நியா 6:12 இந்த வார்த்தையைக் கேட்டவுடன் கிதியோனுக்குள்ளே புதிய உற்சாகமும், உந்துதலும் ஏற்பட்டபடியால், மனாசேயில் எளிய குடும்பத்தின் சிறியவனாகிய இஸ்ரவேலரை மீதியானியரின் கைக்குத் தப்புவித்தான்.

இயேசுகிறிஸ்து சொன்ன உவமையை கவனித்துப் பாருங்கள். நல்லது, உண்மையும் உத்தமமுமான ஊழியனே கொஞ்சத்தில் உண்மையாய் இருந்தாய் அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். இப்படிப்பட்ட அங்கீகரிக்கும் வார்த்தைகள் நமது உதட்டிலிருந்தும், உள்ளத்திலிருந்தும் புறப்பட்டு வர வேண்டும்.

மனாசே, எப்பிராயீம் கோத்திரத்தார் யோசுவாவிடத்தில் வந்து முறையிட்டபோது கானானியரிடத்தில் இருப்பு இரதங்கள் உண்டு என்று கூறிய போது, நீங்கள் ஜனம் பெருத்தவர்கள், உங்களுக்கு மகா பராக்கிரமம் உண்டு. ஒரு பங்கு மாத்திரமல்ல மலைத் தேசமும் உங்களுடையதாகும். நீங்கள் அவர்களைத் துரத்தி விடுவீர்கள். (யோசு 17:17, 18) என்று யோசுவா அவர்களை உற்சாகப் படுத்தினான். அதனால் அவர்கள் மலைத்தேசத்தை சுதந்தரித்துக் கொண்டார்கள்.





மோசே தனது கடைசிக் காலத்தில் இஸ்ரவேலர் ஜனங்களுக்கு பேருரை ஆற்றினது போலவே யோசுவாவும் தனது கடைசிக் காலத்தில் இஸ்ரவேலருக்கு ஞாபகமூட்டும் பேருரை ஒன்றை நிகழ்த்தினார்.

"கர்த்தருடைய தாசனாகிய மோசே உங்களுக்கு கட்டளையிட்டவைகளெல்லாம் நீங்கள் கைக் கொண்டீர்கள். நான் உங்களுக்கு கட்டளையிட்டட யாவிலும் என் சொற்படி. செய்தீர்கள்" (யோசுவா 22:2)

உங்கள் தேவனாகிய கர்த்தருடைய கட்டளையை கைக் கொண்டு நடந்தீர்கள் (யோசுவா 22:3)

இந்த வசனப்பகுதிகளை வாசித்துப் பார்த்தால், மனாசே, ரூபன், காத் ஆகிய கோத்திரத்தார், இதுவரை தமது சகோதாருக்காக யுத்தத்தை செய்து உடன் வந்து உதவின காரியத்தை மறவாமல் யோசுவா நினைவுக் கூர்ந்து, ஆசீர்வதித்து அவர்கள் அங்கீகரித்ததை தெளிவாக அறிய முடியும்.

நமது சபையாரோ அல்லது உடன் ஊழியரோ தங்கள் கடமையைச் செய்தால் கூட அவர்களின் கிரியையை அங்கிகரித்து ஆசீர்வாதிக்க வேண்டும். அதை விடுத்து அவன் எனக்கா செய்தான்? கர்ததருக்காக செய்தான் என்று அலட்சியப்படுத்துவது அழகல்ல.

ஒருவரை ஒருவர் பாராட்டுவதும் ஒருவரை ஒருவர் அங்கீகரிப்பதும், ஆசீர்வதிப்பதும் தேவன் விரும்புகிற காரியமாகும்.

யோசுவாவைக் குறித்து எழுத இன்னும் ஏராளமான காரியம் முண்டு எனினும் இத்துடன் முடித்து விடுகிறேன். யுத்த வீரனாக வேதத்தில் அறிமுகம் செய்து வைக்கப் பட்ட யோசுவா மோசேயின் ஊழியக்காரனாகி

அதையடுத்து **கர்த்தருடைய ஊழியக்காரன்** என்ற அங்கீகாரத்தை, பரிசுத்த ஆவியானவரிடத்தில் (வேதத்தில்) பெற்று தனது நூற்றுபத்தாவது வயதில் தனது ஓட்டத்தை முடித்தார்.

கானான் தேசத்தை எல்லா கோத்திரத்திற்கும் பொருமையாக பங்கிட்டு கொடுத்த யோசுவா, வெருமையாக நின்றார். இதைக் கண்ட இஸ்ரவேல் புத்திரர் நூனின் குமாரனாகிய யோசுவாவுக்குத் தங்கள் நடுவிலே ஒரு சுதந்திரத்தை கொடுத்தார்கள். திம்னாத்சேரோ என்னும் அவன்கேட்ட பட்டணத்தை அவனுக்கு கர்த்தருடைய வாக்கின்படியே கொடுத்தார்கள் அதிலே குடியிருந்தான் (யோசுவா 19:49, 50)

அல்லேலுயா! ஒப்பற்ற தலைவன் ஒழுக்கமுள்ள தலைவன் இந்த யோசுவா. தன் கையில் எல்லாம் ஒப்புக் கொடுக்கப் பட்டு இருந்தாலும் தனக்கென ஒன்றையும் சேர்த்துக் கொள்ளவில்லை.

ஆஹா! இன்றைய தலைவர்கள் இந்தப் பகுதியை ஒரு நிமிடம் மாத்திரம் சிந்தனை செய்தால் போதும், ஊழியத்திற்கு உதவாமல் முடக்கப்பட்ட சொத்துக்கள் எல்லாம் நாளைக்கே வெளியே வந்து விடும். இந்திய திருச்சபைகள் மாபெரும் மாற்றம் பெற்று விடும்.

பிரியமானவர்களே! மோசேயின் சொற்படி செய்து தேவ சித்தத்தை நிறைவேற்றின யோசுவா போன்ற யுத்த வீரர்களை, வளமிக்க வாலிபர்களை, தலைசிறந்த தலைவர்களை கர்த்தருடைய கண்கள் தேடுகிறது. வாருங்கள் நானும் வருகிறேன் நாம் எழும்பி தேசத்தை சுதந்தரிப்போம்.

முற்றும்



# விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,

**Pr. அலெக்ஸ் தினகரன்**